உ
சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை
Monthly Journal of Sivapoomi

விலை 30/=

சிவம் - 02 | விளம்பி வருடம் பங்குனித் திங்கள் ஏப்ரல் 2019 | பூமி - 02


## “எம் மண்ணுக்குரிய நன்றிக்கடனை நிறைவேற்ற வேண்டும்”

### - வைத்தியநிபுணர் கந்தப்பிள்ளை பார்த்தீபன்

“இந்த மண்ணில் படித்த நாம், புலம்பெயர் தேசத்தில் வாழ்ந்தாலும், எம் மண்ணுக்குரிய நன்றிக் கடனை என்றாவது நிறைவேற்ற வேண்டும்”. இவ்வாறு ‘அபயம்’ மருத்துவ சேவை நிலையத்தின் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு, நிலையத்தை திறந்து வைத்துப் பேசிய லண்டன் வைத்திய நிபுணர் கந்தப் பிள்ளை பார்த்தீபன் அவர்கள் குறிப்பிட்டார்.

சிவபூமி அறக்கட்டளையின் ஏற்பாட்டில், ஆனைக் கோட்டை கூழாவடியில் அமைக்கப்பட்டுள்ள ‘அபயம்’ மருத்துவ சேவை நிலையம் கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதியன்று திறந்து வைக்கப்பட்டது. கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெற்ற இந்த வைபவத்தின் போது தொடர்ந்து உரையாற்றிய வைத்திய நிபுணர் க.பார்த்தீபன் மேலும் இவ்வாறு தெரிவித்தார்.

“யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் கற்ற நான், இங்கிலாந்தில் பல வருடங்களாக வாழ்ந்து வருகிறேன். என்னைப் போன்ற வைத்திய நிபுணர்கள் எம் மண்ணுக்கு சேவை செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் பணிசெய்ய முன்வந்துள்ளார்கள். மருத்துவர்களும், வேறு தொழிலில் ஈடுபட்டு இருப்பவர்களும் இணைந்து ‘அபயம்’ என்ற பெயரில் இந்த அமைப்பை உருவாக்கி கல்வி, சுகாதாரப் பணிகளுக்கு தொடர்ந்து உதவி வருகிறோம். இன்று எம் மண்ணில் நோயாளர்களுக்கும் ஏழை மாணவர்களுக்கும் உதவுவதற்காக இந்நிலையம் திறக்கப்படுகிறது. இன்று முதல் சுழற்சி முறையில், பிறநாடுகளில் பணிசெய்யும் வைத்திய நிபுணர்கள் இந்நிலையத்திற்கு வருகைதந்து இலவசமாக வைத்தியப் பணியாற்றவுள்ளார்கள்.

யாழ்.போதனா வைத்தியசாலை உட்பட அரச வைத்திய சாலைகளில் சிறப்பாகப் பணியாற்றிவரும் மருத்துவர்களின் வேலைப்பளுவை சற்றுக் குறைப்பதற்கு எம்மாலான உதவியை நாம் செய்ய முன்வந்துள்ளோம். இங்கு வாழும் சான்றோர்கள் அபிப்பிராயங்களையும் நல்ல ஆலோசனை-களையும், ஆதரவையும் தந்து உதவுங்கள். நாம் சிவபூமி அறக்கட்டளையுடன் இணைந்து இந்த மருத்துவ சேவை நிலையம் ஊடாக இயன்றவரையில் மக்களுக்கு உதவுவோம். சிவபூமி அறக்கட்டளை இந்த வீட்டை எமது பணிக்காக வழங்கியமை பாராட்டுக்குரியது. இந்த வீட்டையும் காணியையும் சிவபூமி அறக்கட்டளைக்கு அன்பளிப்புச் செய்த வைத்தியகலாநிதி அம்பலவாணர் பொன்னம்பலம் குடும்பத்தினருக்கு நாம் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

அபயம் மருத்துவசேவை நிலையத்தை சிறப்பாக இயக்குவதற்கு யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி அவர்கள் முன்வந்து உள்ளார்கள் என்பது மகிழ்ச்சியைத் தருகிறது. இங்கிலாந்தில் இருந்து வருகை தந்துள்ள சிறுவர் வைத்திய நிபுணர் சிவகுமாரன் அவர்கள் இங்கு சில நாட்கள் தங்கியிருந்து சிகிச்சை வழங்கவிருக்கிறார். எம்மால் இயன்ற அளவு எம் மண்ணில் வாழும் மக்களுக்கு உதவுக் காத்திருக்கிறோம்” என்கிறார் வைத்திய நிபுணர் பார்த்தீபன் அவர்கள்.

அபயம் மருத்துவ சேவை நிலையத்தின் திறப்பு விழா வைபவத்தில் அமெரிக்க ஹவாய் சைவ ஆதீனத்தைச் சேர்ந்த ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆசியுரை வழங்கியிருந்தார். ஆறு. திருமுருகன் அவர்கள் தனது தலைமை உரையில், “சிவபூமி அறக்கட்டளையின் மற்றுமொரு செயற்பாடாக, நல்ல காரியம் கைகூடியுள்ளது. சமூகத்திற்குச் செய்யும் பெரும் பணியாக பலராலும் இக்கைங்கரியம் போற்றப்படுகிறது. அபயம் அபயம் என்று மக்கள் தஞ்சமடையும் இடமாக இது மாற்றம் பெறுவது சிறப்புக்குரியது” என்றார்.

(தொடர்ச்சி உள்ளே)




மின்னஞ்சல் - sivapoomiprinters@gmail.com தொலைபேசி - 021 222 7938

# ஆனைக்கோட்டை, கூழாவடி 'அபயம்' மருத்துவ சேவை நிலையம் திறப்பு விழா (31.03.2019)



# சிவபூமி

சிவம் - 02 ஏப்ரல் 2019 பூமி - 02

சிந்தனை செய்வோம்


## உதயமாகவிருக்கும் வன்னிப் பல்கலைக்கழகம்

இப்போது இயங்கிவரும் யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தை வன்னிப் பல்கலைக்கழகமாக மாற்றவேண்டும் என நீண்ட காலமாகவே பலர் முயற்சி செய்து வருகிறார்கள். வவுனியா வளாக கல்விச் சமூகமும் இதனை தரமுயர்த்த வேண்டும் என பல தடவைகள் கோரிக்கைகள் விடுத்து வந்துள்ளது. வவுனியா வளாகத்தை பல்கலைக்கழகமாக தரமுயர்த்துவதனை வரவேற்பதில் எதுவித தவறும் இல்லை. ஆனால், அரசியல் பிரமுகர்கள் வவுனியா வளாகத்தை மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுடன் இணைத்து பெரிய அளவில் வன்னிப் பல்கலைக்கழகத்தை விரிவாக்கம் செய்ய வேண்டும் என பாராளுமன்றம் வரை கருத்துக்கூறி வருகிறார்கள். வவுனியா, மன்னார் மாவட்ட முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் சமீப காலத்தில் இதுவிடயத்தில் அக்கறை கொண்டுள்ளனர்.

இலங்கையில் பதினைந்துக்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் உருவாகி வளர்ச்சி கண்டுவருகின்றன. இவற்றுள் யாழ்.பல்கலைக்கழகம் தனித்துவமும் மதிப்பும் பெற்று விளங்குகின்றது. யாழ்.பல்கலைக்கழகமும் ஆரம்பத்தில் வளாகமாக நிறுவப்பட்டு, பின்னர் பல்கலைக்கழகமாக உயர்ந்தது. அது வளாகமாக இயங்கிய காலத்திலேயே பல பேராசிரியர்கள் அங்கு பணியாற்றினர். ஆனால், வவுனியா வளாகத்தில் தற்போது பேராசிரியர் என்ற நிலையில் கல்வியாளர்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றனர்.

வவுனியா வளாகம் தற்போது மிகவும் சிறப்பாக இயங்கிவருவது பெருமைக்குரிய விடயம். எனினும், எமது பிரதேச மாணவர்கள் எத்தனை வீதம் வன்னி வளாகத்தில் கற்கிறார்கள் என்பது கேள்விக்குறியாகும். இந்நிலையில் வவுனியா வளாகம் பல்கலைக்கழகமாக தரம் உயரும்போது, அப் பல்கலைக்கழகம் சார்ந்த பிரதேச மக்களின் கல்வி நிலையில் மாற்றம் ஏற்படவேண்டும். இல்லையேல் வன்னிப் பல்கலைக்கழகம் வன்னிப் பிரதேச மக்களின் வாழ்வை உயர்த்தி வைக்கும் என்ற கருத்து அர்த்தமற்றதாகிவிடும். பிரதேசத்திலுள்ள மக்கள் சுயமொழியில் கற்றலுக்கான புதிய துறைகள் ஆரம்பிக்கப்பட வேண்டியது தருமமாகும். இதைவிடுத்து, ஆங்கில மொழி மூலமாக கற்கைபீடங்களை மட்டும் கொண்ட பல்கலைக்கழகமாக இது செயற்படுமானால், வன்னிப் பிரதேச மாணவர்கள் முழுமையான பயனைப் பெறுவார்களா என்பதற்கு காலந்தான் பதில் சொல்லவேண்டும்.

தென்புலத்து பல்கலைக்கழகங்கள், அப்பகுதி மாணவர்களை பெருமளவு உள்ளீர்க்கக்கூடிய வகையில் திட்டமிடல்களை சரியாக அமைத்ததினால், அப்பிரதேச மக்களின் கல்வி அபிவிருத்தி மிக உன்னத நிலையை அடைந்து வருகிறது. வன்னிப் பல்கலைக்கழக வரவுக்காக கல்விச் சமூகமும், மக்கள் பிரதிநிதிகளும் அப்பிரதேச மக்களை கருத்தில்கொண்டே செயற்படவேண்டும் என்பது யதார்த்தமான உண்மையாகும். யாழ்.பல்கலைக்கழகத்திலிருந்து வன்னி வளாகத்தை பிரித்துவிட வேண்டும் என்று சிலர் ஆரவாரம் செய்யலாம். ஆனால், இதுவிடயத்தில் சிந்தித்து செயற்படவேண்டியது அனைவரதும் கடமையாகும்.

## இந்துக்களின் விரத நாட்களும் விசேட தினங்களும் (ஏப்ரல் 2019)

| | | | |
|---|---|---|---|
| 01 | திங்கள் | : | ஏகாதசி விரதம் |
| 02 | செவ்வாய் | : | பிரதோஷ விரதம் |
| 05 | வெள்ளி | : | அமாவாசை விரதம் |
| 08 | திங்கள் | : | கார்த்திகை விரதம் |
| 09 | செவ்வாய் | : | சதுர்த்தி விரதம் |
| 10 | புதன் | : | சஷ்டி விரதம் |
| 13 | சனி | : | ஸ்ரீராம நவமி |
| 14 | ஞாயிறு | : | தமிழ் புதுவருடப் பிறப்பு |
| 15 | திங்கள் | : | ஏகாதசி விரதம் |
| 17 | புதன் | : | பிரதோஷ விரதம் |
| 19 | வெள்ளி | : | சித்திரா பூரணை விரதம்<br>சித்திர குப்த விரதம் |
| 22 | திங்கள் | : | சங்கடஹர சதுர்த்தி |
| 27 | சனி | : | நடேசர் அபிஷேகம் |
| 30 | செவ்வாய் | : | ஏகாதசி விரதம் |



### விநாயகர் வணக்கம்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை

## துர்க்காதேவி தேவஸ்தானத்தில் வருடாந்த பொங்கல் விழா

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் வருடாந்த பொங்கல் விழா இம்மாதம் 9ஆம் திகதி நடைபெற்றது. அன்றைய தினம் காலை 6.00 மணியளவில் வழுந்துப்பானை ஏற்றும் வைபவத்துடன் பொங்கல் விழா ஆரம்பமானது. பெருமளவு அடியார்கள், ஆலய வீதியில் பொங்கல் செய்து தங்களது நேர்த்தியை நிறைவேற்றிக் கொண்டார்கள்.

## துர்க்காபுரம் மகளிர் இல்லம் 37ஆவது ஆண்டு நிறைவு விழா

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 37ஆவது ஆண்டு நிறைவு விழா இம்மாதம் 7ஆம் திகதி நடைபெற்றது.

கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தம்பதியினர் பிரதம விருந்தினர்களாகவும், வடக்கு மாகாணசபை பிரதிப் பிரதம செயலாளர் திருமதி சரஸ்வதி மேகநாதன் சிறப்பு விருந்தினராகவும், வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை ஓய்வுநிலை அதிபர் திருமதி வேணுகா சண்முகரட்ணம் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொண்டார்கள். மகளிர் இல்ல மாணவிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வும் சிறப்பு அம்சமாக இடம்பெற்றது.

## அவுஸ்திரேலியாவில் சிறப்புக் கலை நிகழ்ச்சிகள்

அவுஸ்திரேலியா அபயகரம் அறக்கட்டளை நிறுவனம் ஆண்டுதோறும் நடத்திவரும் சிறப்புக் கலை நிகழ்ச்சிகள், வழமைபோல இவ்வருடமும் அவுஸ்திரேலியா சிட்னி நகரில் இம்மாதம் 13ஆம் திகதியன்று நடைபெறவிருக்கிறது.

## அவுஸ்திரேலியாவில் சிவபூமி விழா

இலங்கை சிவபூமி அறக்கட்டளையின் சேவையைப் பாராட்டும் வகையிலும், அதன் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களை கௌரவிக்கும் வகையிலும், அவுஸ்திரேலியாவில் வசிக்கும் ஈழத்தவரான திரு.வைத்திலிங்கம் ஈழலிங்கம் அவர்களது தலைமையில் சிறப்பு நிகழ்வொன்று இம்மாதத்தில் அவுஸ்திரேலியாவில் நடைபெறவிருக்கிறது.

## செஞ்சொற்செல்வர் அவுஸ்திரேலியா பயணமாகிறார்

சிவபூமி அறக்கட்டளையின் தலைவரும் பிரபல சமயச் சொற்பொழிவாளருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் ஆன்மிக நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்காக அவுஸ்திரேலியா அழைக்கப்பட்டுள்ளார். இவர் சிட்னி, மெல்போர்ன் மாநிலங்களில் நடைபெறவிருக்கும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவிருப்பதுடன், சிட்னி முருகன் ஆலயத்திலும் மூன்று தினங்கள் சிறப்புரையாற்றுவார்.

அவுஸ்திரேலியா சைவ சித்தாந்த மையத்திலும் இவரது சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும். அவுஸ்திரேலியா தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இந்த சொற்பொழிவு நிகழ்வை நேரடியாக ஒலிபரப்புச் செய்யவிருக்கிறது.

## "எம் மண்ணுக்குரிய நன்றிக்கடனை நிறைவேற்ற வேண்டும்"

(முன் அட்டையிலுள்ள செய்தியின் தொடர்ச்சி)

யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி அவர்கள் தனது உரையின்போது "இந்த மருத்துவ சேவை நிலையம் மக்களுக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதம் என்று சொல்லலாம். மிக விரைவாக இந்தப் பணி நடந்து முடிந்து இயங்கத் தொடங்கியிருக்கிறது. உள்நாட்டு, வெளிநாட்டு மருத்துவர்களின் உதவியுடன் சுகாதார, கல்விப் பணிகள் இங்கு முழு அளவில் செயற்படவிருப்பது சிறப்புக்குரியது" என்று குறிப்பிட்டார்.மேற்படி நிகழ்வில் சிறுவர் வைத்திய நிபுணர் சிவகுமாரன் அவர்களும் உரையாற்றினார்.

இந்த வைபவம் நிறைவுபெற்ற பின்னர், மாலை 5.15 மணி முதல் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு சம்பந்தப்பட்ட நோய்களுக்கான வைத்திய சிகிச்சை ஆலோசனைகள் வைத்திய நிபுணர்களால் மேற்கொள்ளப்பட்டன. அபயம் மருத்துச் சேவை நிலையம் முற்றுமுழுதாக இலவசமாக இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

# பளை, இயக்கச்சியில் நாய்கள் சரணாலயம்

சிவபூமி அறக்கட்டளையின் ஏற்பாட்டில் பளை, இயக்கச்சியில் அமைக்கப்பட்டு வரும் நாய்கள் சரணாலயம் இம்மாதம் 12ஆம் திகதியன்று திறந்துவைக்கப்படவிருக்கிறது.

மனித வாழ்வில் செல்லப் பிராணிகளாக வளர்க்கப்படும் நாய்களை தெருவில் விடுவது மிகவும் துன்பகரமானது என தவத்திரு யோகர் சுவாமிகள் எடுத்துரைத்துள்ளார். 21ஆம் நூற்றாண்டில் எம் மண்ணில் கட்டாக்காலி நாய்களாக தெருவில் அலைந்து திரியும் நாய்களின் நிலையை கருத்தில் கொண்டு கடந்த மூன்று ஆண்டு காலமாக சிவபூமி அறக்கட்டளை எடுத்த முயற்சிகள் கைகூடும் நிலையை எட்டியுள்ளது.

## சிவபூமி நாய்கள் சரணாலயம் திறப்பு விழா

காலம் : 12.04.2019 வெள்ளிக்கிழமை
நேரம் : பிற்பகல் 4.00 மணி
இடம் : பற்றாவளை வீதி, இயக்கச்சி

**தலைமை**

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்

**நிகழ்ச்சி நிரல்**

4.00 மணி : இறைவணக்கம்
: மங்கள விளக்கேற்றல்
: சரணாலயம் திறந்து வைத்தல்

**ஆசி வழங்கும் ஆன்மீகப் பெரியோர்கள்**

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
(முதல்வர், நல்லை ஆதீனம்)

ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள்
(ஹவாய் சைவ ஆதீனம், அமெரிக்கா)

**அதிதிகள்**

கௌரவ சுரேன் ராகவன்
(ஆளுநர், வடக்கு மாகாணம்)

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள்
(வடக்கு மாகாணம்)

திரு. சுந்தரம் அருமைநாயகம்
(அரச அதிபர் / மாவட்டச் செயலாளர், கிளிநொச்சி)

திரு.நா.வேதநாயகன்
(அரச அதிபர் / மாவட்ட செயலாளர், யாழ்ப்பாணம்)

திரு.இ.இளங்கோவன்
(செயலாளர், வடமாகாண ஆளுநர் அலுவலகம்)

திருமதி ஜெயராணி பரமேஷ்வரன்
(பிரதேச செயலாளர், பளை)

திரு.சுப்பிரமணியம் சுரேன்
(தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை)


நிலம் அன்பளிப்பு
செல்வி ரோகினி பேராயிரவர்

பளை, இயக்கச்சியில் பத்து ஏக்கர் நிலப்பரப்பில் நாய்கள் சரணாலயம் பல இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு இப்போது வேலைகள் நிறைவுபெறும் நிலைக்கு வந்துவிட்டது. இயற்கை அழகுள்ள இயக்கச்சியில் புளியடி சந்தியிலிருந்து தென்திசை நோக்கி ஒருமைல் தூரத்தில் இப் புனித கைங்கரியம் நிறைவேறுகிறது.

நாய்கள் சரணாலயத்திற்கு அருகில் ஒரு திசையில் சிறிய காடும், மறுதிசையில் பெரிய குளமும் இயற்கை அழகுடன் காட்சியளிக்கிறது. சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் மூன்று ஆண்டுகளுக்கு முன் இந்த திட்டம் தொடர்பாக தன் கருத்தினை வெளிப்படுத்தினார். தனது எண்ணத்தை செயற்படுத்தும் வகையில் பாரிய முயற்சியை முதன்முதலாக வடபுலத்தில் சிவபூமி அறக்கட்டளை ஊடாக நிலைநாட்டியுள்ளார். இப்பணிக்கு கைகொடுக்க வேண்டியது அரச அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள் அனைவரினதும் கடமையாகும்.

தெருவில் கைவிடப்பட்ட நாய்கள் சுதந்திரமாக நடந்து திரிவதற்கு ஏற்ற வகையில் பத்து ஏக்கர் நிலத்தில் சரணாலயம் உருவாகியிருக்கிறது. உணவு, மருத்துவம் போன்ற பிரதான கண்காணிப்புடன், இந்த சரணாலயத்தில் ஆரம்பக் கட்டமாக 200 நாய்கள் வசிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நோய்வாய்ப்பட்ட நாய்களை தனியாகப் பராமரிப்பதற்கான வசதியும், சிறு குட்டிகளை வளர்ப்பதற்கான வசதியும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்தப் புண்ணிய பணியை ஏனைய அன்பர்களும் நிறுவனங்களும் பல்வேறு இடங்களில் ஆரம்பித்து, தெருக்களில் அலைந்து திரியும் நாய்களால் ஏற்படும் அவலத்திலிருந்து எமது சமூகத்தை காப்பாற்றுவதற்கு பெரிதும் உதவவேண்டும் என்பது சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களின் விருப்பமும் வேண்டுகோளுமாகும்.



# சித்திரைப் புதுவருடப் பிறப்பும் சுப நேரங்களும்

சித்திரைப் புதுவருடம் இம்மாதம் 14ஆம் திகதி உதயமாகிறது. விகாரி என்ற பெயரில் பிறக்கும் இப்புதுவருடம், தமிழ் வருடங்களின் சுற்றுவட்டத் தொடரில் 33ஆவது வருடமாகும்.

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி இம்மாதம் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 1 மணி 12 நிமிடத்தில் பூர்வபட்ச தசமி திதியில், ஆயிலியம் நட்சத்திரம் 2ஆம் பாதத்தில், கடக இராசியில், கடக லக்கினத்தில் புதுவருடம் பிறக்கிறது. அதேதினம் காலை மணி 9.12 முதல் மாலை 5.12 வரை விஷு புண்ணியகாலமாகும். இந்த புண்ணிய காலத்தில் சகலரும் தலையில் மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்ய வேண்டும். இதன் பின்னர் வெள்ளை நிறப் பாட்டாடை அல்லது வெள்ளை சிவப்புக் கரையமைந்த புதிய பட்டாடையையும், முத்து மாணிக்கம் பதித்த ஆபரணத்தையும் அணிந்து கொண்டு ஆலயங்களுக்குச் சென்று இறைவழிபாடு செய்தல் வேண்டும் என வாக்கிய பஞ்சாங்கம் சொல்கிறது.

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி இம்மாதம் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி 9 நிமிடத்தில் பூர்வபட்ச தசமி திதியில், ஆயிலியம் நட்சத்திரம் 2ஆம் பாதத்தில் கடக இராசியில், கடக லக்னத்தில் புதுவருடம் பிறக்கிறது. அதேதினம் காலை மணி 10.09 முதல் மாலை மணி 6.09வரை மேட சங்கிரமண அல்லது விஷு புண்ணிய காலமாகும். இந்த புண்ணிய காலத்தில் சகலரும் தலையில் இலவம் இலையையும், காலில் விளா இலையையும் வைத்து மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்ய வேண்டும். இதன் பின்னர் சிவப்புக் கரை வைத்த புதுவஸ்திரம், மாணிக்கம் பதித்த ஆபரணத்தையும் அணிந்து கொண்டு ஆலயங்களுக்குச் சென்று இறைவழிபாடு செய்தல் வேண்டும் என திருக்கணித பஞ்சாங்கம் சொல்கிறது.

மலரவிருக்கும் சித்திரைப் புதுவருடப் பிறப்பு பூநர்பூசம், பூசம், ஆயிலியம், கேட்டை, மூலம், பூராடம், உத்தராடம் (முதலாம் பாதம்), ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு தோஷமாகும். இவர்கள் அனைவரும் தவறாது மருத்து நீர் தேய்த்து ஸ்நானம் செய்வது அவசியம் என பஞ்சாங்கக் குறிப்பு சொல்கிறது.

புதுவருடம் பிறந்தால் கைவிசேடம் பரிமாறிக் கொள்வது பாரம்பரிய வழக்கமாகும். வாக்கிய பஞ்சாங்கத்தின்படி 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு மணி 10.31 முதல் 11.15 வரையும், 17ஆம் திகதி புதன்கிழமை காலை மணி 10.16 முதல் 11.51 வரையும் கைவிசேடத்துக்குரிய சுபநேரங்களாகும்.

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு மணி 8.20 முதல் 9.30 வரையும், 15 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை மணி 5.00 முதல் 6.00 வரையும் கைவிசேடத்துக்குரிய சுபநேரங்களாகும்.

புதுவருடம் பிறந்த பின்னர் நல்லநாள், சுப நேரம் பார்த்து உறவினர்கள், நண்பர்கள் வீடுகளுக்குச் சென்று வாழ்த்துகளைப் பரிமாறிக்கொண்டு விருந்துபசாரங்களில் கலந்துகொள்வதும், குரு மற்றும் பெரியோர்களை தரிசனம் செய்து ஆசி பெற்றுக் கொள்வதும் பாரம்பரிய நடைமுறையாக நீண்டகாலமாகவே இருந்து வருகிறது. இதற்குரிய சுபநேரங்களாக வாக்கிய பஞ்சாங்கத்தில் 17ஆம் திகதி புதன்கிழமை காலை மணி 10.16 முதல் 11.51வரையும், திருக்கணித பஞ்சாங்கத்தில் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு மணி 8.20 முதல் 9.30 வரையும், 17ஆம் திகதி புதன்கிழமை காலை மணி 10.00 முதல் 11.15 வரையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

– அ.கனகசூரியர்

**சிவபூமி வாழ்த்துகிறது**

## மணிவிழா காணும் திருமதி கலைவாணி குகதாசன்





கோண்டாவில் சிவபூமி பாடசாலையின் அதிபரும், பிரபல கண் சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் குகதாசன் அவர்களின் துணைவியாருமான திருமதி கலைவாணி குகதாசன் அவர்களின் மணிவிழா இம்மாதம் முதலாம் திகதியன்று, கோண்டாவில் சிவபூமி பாடசாலை கலையரங்க மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. மணிவிழா காணும் இவரை சுகமுடன் வாழ்ந்து நலம்பெற வேண்டும் என சிவபூமி பத்திரிகை இனிதே வாழ்த்துகிறது.

# புதுவருடப் பிறப்பும் இந்துப் பண்பாட்டு அம்சங்களும்

பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன்

இந்துக்களின் வருடப்பிறப்பும் சித்திரைமாதப் பிறப்பும் ஒரே நாளாகும். சூரியன் சித்திரை மாதத்தில் இராசிகளுள் முதலாவதாகிய மேட ராசியில் பிரவேசிப்பதால் சித்திரை மாதம் பிறக்கிறது. இந்நன்னாளில் மருத்து நீர் தேய்த்து நீராடிப் புத்தாடை அணிவார்கள். என்ன நிறங் கொண்ட ஆடை அணிவது என்பதனைப் பஞ்சாங்கத்திற் காணலாம்.

சித்திரை வருடப் பிறப்பு நாளன்றும், அம்மாதம் முழுவதும் கோயில்களிலும், வித்தியாசாலைகளிலும், பொது இடங்களிலும் போர்த்தேங்காய் அடித்தல் விளையாட்டு பழங்காலந்தொட்டு நடைமுறையில் இருந்து வருகிறது.

சித்திரைப் புத்தாண்டை வருடா வருடம் இந்துக்களாகிய நாம் கொண்டாடி வருகிறோம். இந்நாள் எமக்கு ஒரு மங்களகரமான நாளாகும். 'பழையன கழிதலும் புதிய புகுதலும்' என்ற மரபிற்கமையப் புத்தாண்டில் புதிய விடயங்களைச் சகலரும் எதிர்பார்ப்பது வழக்கம்.

வருடம் பிறக்கும் நேரத்தையும் விஷு புண்ணிய காலத்தையும் சங்கிரம தோஷத்தையும் பஞ்சாங்கத்திலே பார்த்து அதிலுள்ள அறிவுறுத்தலின்படி நடந்து கொள்ளும் நடைமுறையே இந்துக்களது வழக்கமாகும். சங்கிரமதோஷ நிவிர்த்திக்கு மருத்துநீர் பெரிதும் உதவுகிறது.

## மருத்துநீர்

தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, விஷ்ணு கிராந்தி, சீதேவியார் செங்கழுநீர், வில்வம் இலை, அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திற்பிலி, சுக்கு முதலிய விசேஷ திரவியங்களை நன்னீரிற் காய்ச்சிப் பெறப்படுவதே மருத்துநீர் ஆகும். இது சிவாச்சாரியார்களினால் காய்ச்சி ஆலயங்களிலே எல்லோருக்கும் விநியோகிக்கப்படுகிறது. மருத்து நீரை எமது சிரசிலே தேய்த்து நன்னீரில் நீராடல் வேண்டும்.

## புத்தாண்டுப் பொலிவு

புத்தாண்டு பிறக்குமுன் வீடு, கோயில் முதலானவை கழுவி மெழுகப்படும், வெள்ளை அடிக்கப்படும். நிற மை பூசப்படும். மாவிலை தோரணம் கட்டப்பட்டு வண்ண வண்ணக் கோலங்கள் போடப்படும். இவற்றால் எங்குமே அழகு ததும்பும் பொலிவு பெறும். இதே வேளையில் புதுவருடப் பட்சணங்களைத் தயார் செய்யும் பணியில் பெண்கள் ஈடுபடுவர். முதலில் இனிப்புப் பலகாரம் செய்யப்படும். பின்பு ஏனைய வகைவகையான பலகாரங்கள் செய்யப்படும்.

## வழிபாடு

புத்தாண்டுக்கான வழிபாடு இனி ஆரம்பமாகும். பூஜை அறையில் உள்ள சுவாமிகளுக்கான படையல் என்பன எல்லாம் தயார் செய்யப்படும். குத்து விளக்கு, பூரண கும்பம், அஷ்டமங்கலப் பொருட்கள் என்பன வைக்கப்படும். மஞ்சள் பிள்ளையார் நடுநாயகமாக வீற்றிருப்பார். வீட்டில் உள்ளவர்கள் எல்லோரும் வணங்கி நிற்க இல்லத் தலைவன் பிள்ளையார் வழிபாடு செய்து சூரிய வழிபாடும் செய்வர். இதனை அடுத்து வீட்டுச் சுவாமி அறையில் பூஜைகள் இடம்பெறும். அடுத்து கோயில் வழிபாடு ஆரம்பமாகும். சகலரும் தத்தமது இஷ்ட தெய்வ வழிபாடுகளைக் கோயிலுக்குச் சென்று நிறைவேற்றுவர்.

## சங்கிராந்தித் தீர்த்தம்

புதுவருடமானது எந்நேரத்திற் பிறக்கின்றதோ அதனையொட்டி சங்கிராந்தித் தீர்த்தம் கோயில்களில் இடம்பெறுகிறது, இராசிமண்டலத்தில் சூரிய பகவான் ஓர் இராசியில் இருந்து அடுத்த இராசிக்குப் பிரவேசித்துச் சங்கமித்தல் மாதப்பிறப்பு எனப்படும். இப்படியான காலத்தில் சங்கிராந்தித் தீர்த்தம் நடைபெறுகிறது. புதுவருடத்தையொட்டி இப்படியான சங்கிராந்தித் தீர்த்தம் நடைபெறுவதால் இது புத்தாண்டுத் தீர்த்த நாளாக அமைகிறது. இதன் பின்பே கோயில்களில் புத்தாண்டுப் பொங்கல் இடம்பெறும். புத்தாண்டையொட்டி வீடுகளில் சூரியோதயத்திலும், கோயில்களில் புத்தாண்டு பிறக்கும் நேரத்திலும் பொங்கல் இடம்பெறுவதை நாம் மனதிலிருத்திக் கொள்ளல் வேண்டும். சில கோயில்களில் புத்தாண்டுப் பொங்கல் மாலை வேளையில் இடம்பெறுகிறது. இது பரம்பரை பரம்பரையாக வந்த வழக்கமாகும். குலதெய்வ வழிபாட்டின் மேம்பாடு காரணமாகப் புத்தாண்டுப் பொங்கல் கோயில்களில் பல்லாண்டு காலமாக இடம்பெற்று வருகிறது.

## புத்தாண்டுப் போசனம்

புத்தாண்டு நாளன்று சுற்றத்தாருக்கும் உற்றார் உறவினர்களுக்கும் பொங்கல், சிற்றுண்டி என்பன வீட்டில் வழங்கப்படும். பின்பு வீட்டில் உள்ளோர்

அனைவரும் புத்தாண்டு உணவை உட்கொள்வர். புத்தாண்டுக்கான மதிய போசனத்தில் தித்திப்பு, உறைப்பு, கசப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, புளிப்பு முதலான அறுசுவை உண்டி முக்கியமான தொன்றாகும்

### கைவிசேஷம்

புதுவருடப் பிறப்பின்போது பலரும் எதிர்பார்த்திருப்பது கைவிசேடமாகும். பஞ்சாங்கம், கைவிசேட நேரத்தைக் கூறும். குடும்பத் தலைவர் அவ்வேளையில் வெற்றிலையிலே பாக்கு, நெல், பூ, பணம் என்பன வைத்து வீட்டில் உள்ளவர்களுக்கும் ஏனையோருக்கும் கொடுப்பது கைவிசேஷம் ஆகும். வருஷம் பிறக்கும் வேளையில் கைவிசேஷம் செய்யும் மரபும் உள்ளது.

### புதுக் கணக்கு

வியாபார நிறுவனங்கள் சுபவேளையில் பிள்ளையார் சுழி போட்டுப் புதுக் கணக்கு எழுதும் வழக்கம் புத்தாண்டில் இடம்பெறும் இன்னொரு விசேஷமாகும். மாணவ, மாணவியர் நல்ல நேரத்தில் தமது பாடங்களைப் படிக்கத் தொடங்குவார்கள். புத்தாண்டில் தந்தை, தாய், குரு முதலியோரை வணங்கி அவர்களின் ஆசியைப் பெறுதல் எமது இன்னொரு மரபாகும்.

சித்திரைப் புதுவருடத்தில் வரும் சுபநேரத்தில் உற்றார் உறவினர் வீடுகளுக்கும், சிநேகிதர் வீடு களுக்கும் சென்று விருந்துண்டு பரஸ்பர உறவுகளை வளர்த்துக் கொள்வதும் நமது வழக்கம் ஆகும்.

### விளையாட்டு

பண்டுதொட்டு சித்திரை வருடப் பிறப்பில் போர்த்தேங்காய் அடிப்பது முக்கிய இடத்தை வகித்துவருகின்றது . இது ஒரு விளையாட்டு. கிட்டி அடித்தல், சடுகுடு, தாச்சி மறித்தல் முதலானவைகளும் வருடப்பிறப்பில் இடம்பெறும் பாரம் பாரிய விளையாட்டுக்களாகும். இக்காலத்தில் மிகவும் பிரபல்யம் அடைந்துள்ள கிரிக்கெட், கைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம் ஆகிய விளையாட்டுக்களும் இடம்பெற்று வருகின்றன.

ஆறு பருவ காலங்களில் சிறந்தது இளவேனிற் காலம். இளவேனிற் காலத்தில் முதல் மாதம் சித்திரை. ருதுக்களில் வசந்த ருதுவாக இருக்கிறேன் என்று கீதையில் கூறப்பட்டுள்ளது. விவாகம் முதலிய சுப காரியங்களைச் செய்யவும் சிறந்த காலம். வருஷ ஆரம்பம் நன்றாக இருந்தால் ஆண்டெல்லாம் நன்மை தரும் என்பது நம் கொள்கை.


**(நன்றி : பக்தி அநுபவம்)**



## சித்திரைத் திருநாளே வருக!

சித்திரை திருநாளே வருக!
எங்கள் சிந்தையில் மகிழ்ச்சிகள் பெருக
நாங்கள் முத்திரை பதித்து வாழ்ந்திட வேண்டும்
அதற்கு முற்றிலும் முயற்சிகள் எடுத்திட வேண்டும்
நாங்கள் நித்தமும் உழைத்து உயர்ந்திட வேண்டும்
அந்த உயர்வால் உலகை ஈர்த்திட வேண்டும்!

சித்திரை திருநாளே வருக!
எங்கள் சிந்தையில் மகிழ்ச்சிகள் பெருக
உழைத்தால் மனிதனுக்கு உயர்வு உண்டு
உழைப்பவனுக்கு சமுதாயத்தில் நல்ல பெயர் உண்டு
விதி என்று நினைப்பவனுக்கு
துன்பங்கள் கொடுத்திடும் தொல்லை
மதியோடு வாழ்ந்தால் உனக்கு
காத்திருக்கு இன்பத்தின் எல்லை



சித்திரை திருநாளே வருக!
எங்கள் சிந்தையில் மகிழ்ச்சிகள் பெருக
கதிரியே நீயும் கொஞ்சம் தணிக!

**- தம்பித்துரை**

குட்டிக் கதை

## இறைவனையடைய என்ன தேவை?

**இறைவனை அடைவதற்காக யாருடைய பிராணனாவது துடிக்குமானால் அவர் இறையனுபூதி பெற அவ்வளவு தாமதமில்லை என்று தெரிந்து கொள்ளலாம்.**

ஒருவன் குருவிடம், 'சுவாமி, இறைவனை எப்படி பெறுவது என்பதை எனக்குக் கூறுங்கள்' என்றான். அதற்கு குரு, 'வா, காட்டுகிறேன்' என்று கூறி சீடனை ஒரு குளத்திற்கு அழைத்துச் சென்றார். இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். திடீரென்று குரு சீடனின் தலையைத் தண்ணீரில் அமிழ்த்திப் பிடித்துக் கொண்டார். சிறிது நேரத்திற்குப் பிறகு கையை விட்டார். சீடன் பரிதவித்துப்போய் தலையை மேலே தூக்கினான். உடனே குரு சீடனைப் பார்த்து, 'எப்படி இருந்தது?' என்று கேட்டார். அதற்குச் சீடன், 'சுவாமி! உயிரே போவதுபோல் இருந்தது, பிராணன் கிடந்து துடித்தது' என்றான். இதைக் கேட்ட குரு, எப்போது இறைவனுக்காக உன் உயிர் இப்படித் துடிக்குமோ, அப்போது நீ இறையனுபூதி பெற அதிக தாமதம் இல்லை என்று புரிந்துகொள் என்றார்.

**(ஸ்ரீராமகிருஷ்ணர்)**

# சிறப்புமிக்க சித்திரா பௌர்ணமி

கலாபூஷணம் திருமதி.இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு

பருவங்கள் ஆறு. அவற்றுள் சிறந்தது இளவேனிற் காலம். இந்த இளவேனிற் காலத்தில் முதல் மாதமாக அமைவது சித்திரை மாதமாகும்.

தமிழர் தம் ஆண்டுப் பிறப்பும் சித்திரை மாதப் பிறப்பும் ஒருங்கமைதல் மரபு. இ்.து வசந்த காலம். மல்லிகையும் முல்லையும் மலர்ந்து மணம் வீசும் காலம். தேமாவும், தீம்பலாவும், இனிய பழங்களை வழங்கி மக்களுக்குச் சுவையூட்டும் காலம். யாகங்கள், உபநயனங்கள், திருமணங்கள் இடம் பெறும் சிறந்த காலம். ஆண்டின் ஆரம்பமே இத்தனை சிறப்பாக அமைந்தால், பின் குறைதான் எமக்கு ஏது?

சித்திரை மாதம் என்றதும் எம் மனதில் எழுவது சித்திரா பௌர்ணமி, சித்திர குப்தனார் கதை, பஞ்சாங்க படனம், கைவிஷேடம், இந்திர விழா போன்றவையாம்.

இனி, சித்திரா பௌர்ணமி பற்றி நோக்கலாம். சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரம் கூடிய பூரணையே சித்திரா பௌர்ணமியாம். அன்றைய தினம் வானில் பொங்கி வழியும் முழு நிலாவைப் போல், மக்கள் உள்ளமும் மகிழ்ச்சியால் பொங்கி வழியும். அன்றைய தினம் சித்திரகுப்தருக்கு விரதம் அனுஷ்டிப்பது பண்டைய தமிழர் மரபாகும். மேலும், இப்புண்ணிய மகிழ்ச்சி பொங்கும் நாளில், பொங்கல் பொங்கி தெய்வங்கட்கு நிவேதித்து வழிபடுவதுடன், ஆலயங்களிலே பொது இடங்களிலே கஞ்சி காய்ச்சி, ஏழைகளுக்கு வழங்குவதும் மரபாகும். இது சித்திரைக் கஞ்சி எனப்படும். மாலையில் சித்திரகுப்தனாரது வரலாற்றை ஒருவர் படிக்க ஏனையோர் பயபக்தியோடு கேட்டு அனுபவிப்பார்கள்.

தொடர்ந்து. சித்திரைச் சிறப்பு நாளன்று சித்திரகுப்தனார் விரதத்தை எம் முன்னோர் எவ்விதம் அனுஷ்டித்தார்கள் என்பதை பார்ப்போம். முதலில் சித்திரகுப்தனாரது வடிவத்தை உலோகத்தில் வடித்துப் பூசித்த பின் அவருக்கு அன்னம், வெல்லம் கலந்த எள், பால், நெய், பாயாசம் முதலியன படைத்து தொடர்ந்து வழிபடுதல் முறையாகும். விரதாதிகள் அன்று உப்பை உணவில் தவிர்த்தாக வேண்டும்.

இனி சித்திரை மாதப் பௌர்ணமி பற்றி நோக்கின் பொதுவாக அமாவாசை விரதம் இறந்த பிதாவை நோக்கியும், பௌர்ணமி விரதம் இறந்த தாயை நோக்கியும் அனுட்டிக்கும் விரதமாகும். மாதந்தோறும் பூரணை விரதத்தை அனுட்டிக்க முடியாதவர்கள், தவறாது சித்திரா பௌர்ணமி விரதத்தையாவது அனுட்டித்தல் கடமையும் அவசியமுமாகும். சித்திரா பௌர்ணமி விரதத்தின் பலன் யாதெனில் இ்.து அனுட்டிப்பவர்க்கு மற்றைய மாத பூரணை விரதங்களை அனுட்டிக்கும் பயன்களையும் நல்கவல்லது.

மேலும் இவ்விரதத்தை முறையாக அனுட்டிப்பவர்கள், முதன் முறையில் விரதம் அனுட்டிப்பவராயின் அன்றைய தினம் ஐந்து அல்லது ஒன்பது கலசங்களில், சித்திரகுப்தரையும், எட்டுத் திக்குப் பாலகர் அல்லது நான்கு திக்குப் பாலகரையும் ஆவாகனம் செய்வித்தல், தானம் வழங்கல் முறையாம்.

இதே தினத்தில் சகல பலன்களையும் அளிக்க வல்ல இந்திரவிழா எடுத்தலும் மரபாகும். இந்த இந்திர வழிபாடு பற்றித் தேவிபுராணம் கூறியுள்ளது. இந்திரனை மருக்கொழுந்தினால் அர்ச்சித்து வழிபடல் உகந்ததாகும். இயமனுடைய கணக்குப் பிள்ளையே சித்திரகுப்தராவர். இவருக்கு காஞ்சிபுரத்திலும், திருவண்ணாமலையிலும் வழிபாட்டுச் சந்நிதிகள் உண்டு. யமனுக்கு தெற்குச் திசை உரித்தானது. அவனே தென் திசைக்கு அதிபதியானவன்.

சிவபக்தியால் யமனையும் வென்றவர், மார்க்கண்டேயர். இங்கு சிவ அன்பும் பக்தியும் காலனை, வென்றுவிட்டன எனலாம். சாவித்திரி தன் கற்பாலும் பதிபக்தியாலும் காலனை வென்ற சந்தர்ப்பமும் உண்டு.

பொதுவாக பூரணை நாள் யாவுமே தமிழ் மக்களுக்குத் தலையாய நாட்களாகின்றன. ஒவ்வொரு பூரணைத் தினமும் எம்மால் ஒவ்வொரு விழாவாகக் கொண்டாடப்பெற்று வருகின்றது.

தை மாதப் பௌர்ணமி தைப்பூசத் திருநாளாகவும், மாசிமாதப் பூரணை மாசிமகப் புண்ணிய தினமாகவும், பங்குனி மாதப் பூரணை, பங்குனி உத்தரமாகவும், கார்த்திகை மாதப் பூரணை விளக்கீடாகவும் கொண்டாடப்படுவதையும் யாம் அவதானிக்கின்றோம்.

இந்த வகையில், தாயை இழந்தவர்கள் மாதந்தோறும் இடம்பெறும் பூரணை தினத்தில் விரதம் அனுஷ்டித்தல் சிறப்பாகும். இயலாதவர்கள் சித்திரா பௌர்ணமி தினத்திலாவது தம் தாயை நினைத்து மானசீகமாகப் பூசித்து வழிபட்டு விரதம் அனுஷ்டித்தல் வேண்டும். இதில் ஆண் பிள்ளைகளுக்கே கூடிய பங்கு உண்டு.

நாவலர் நல்வாக்கு



## வித்தியாசாலை

வித்தியாசாலையானது, மாணாக்கர் பலர் கூடி உபாத்தியாயர்களிடத்திலே கல்வி கற்றற்குரிய இடமாம். அது பெரும்பான்மையும் கற்பிக்கப்படும் பாஷை நூல் மதம் என்னும் இவைகளினாலே வேறு வேறு பெயர் பெறும். ஆயினும் வித்தியாப்பியாசஞ் செய்தற்குத் தானமாதலால், அவைகளெல்லாம் வித்தியாசாலை, கல்விபயில்களம், கல்லூரி, பாடசாலை என்பன ஒருபொருட் சொற்கள்.

மனிதர்களாலே தேடற்பாலனவாகிய கல்விப் பொருள் செல்வப்பொருள் என்னும் இரண்டனுள், செல்வப்பொருளைச் சம்பாதித்தற்கும், காப்பாற்றுதற்கும், அதனால் அடையவேண்டிய சுகங்களை உள்ளபடி அறிந்து அனுபவிப்பதற்கும், கடவுளையும் அவரை வழிபடும் நெறியையும் அறிந்து வழிபட்டு முத்தியின்பம் பெறுதற்கும், காரணமாய்ச் சிறந்து முன்னிற்பது கல்வியே ஆதலால், அதனைப் பயிலுதற்குத் தானமாகிய வித்தியாசாலைகளைத் தாபித்தலும், அவைகளுக்கு உதவிசெய்தலும், முதற்பொருள் வைத்து அவைகளை ஒழுங்குபெற நடாத்தி வருதலும், பெரும்புண்ணியங்களாம்.

உண்டபொழுது மாத்திரம் பசியை ஒழித்துச் சிறிய இன்பத்தைக் கொடுத்து பின்பு பசியையும் அதனாலே துன்பத்தையும் கொடுக்கும் அன்னம் போலாகாது, வித்தை, படிக்குந்தோறும் பின் சிந்திக்குந்தோறும் எப்போதும் அறியாமையைக் கொடுத்துப் பெரிய இன்பத்தைத் தருகின்றது. இச் சிறப்புடைமையாலன்றோ, நம்மை ஆளும் அரசினர் பெருந்தொகைப் பொருளை இவ்வித்தியா தருமத்தின் பொருட்டு வருஷந்தோறும் நமக்கு உபகரித்து கல்வியை விருத்தி செய்துகொண்டு வருகின்றார்கள்.

எச்சமயத்தார்க்கும் ஆலயத்திற்சென்று விதிப்படி கடவுளைச் சேவித்து வருதல் தெய்வபக்தி தழைத்தோங்குவதற்குக் கருவியாயிருத்தல் போல, வித்தையை விரும்பிக் கற்கும் மாணாக்கர்களுக்கு ஒழுங்காக வித்தியாசாலைக்குப் போய் உபாத்தியாயருடைய சொல்லுக்கு அடங்கிக் கற்றுவருதல் கல்வி விருத்தியாதற்கு ஏதுவாம். தெய்வபக்தி வளர்தற்கு ஏதுவாகிய ஆலயமில்லாத ஊர்கள் ஊர்களாகாதவாறு போலக் கல்வி வளர்தற்கு ஏதுவாகிய வித்தியாசாலைகளில்லாத ஊர்கள் ஊர்களாகாவாம். ஆதலினாலே யாவரும் ஊர்கடோறும் வித்தியாசாலைகளைத் தாபித்து நடத்தி வருதல் பெரும் புண்ணியம். வித்தியாசாலைகளிலே கருவி நூல் சமய நூல் முதலியவைகளையே யன்றிக் கைத்தொழில்களையும் கற்பிப்பது விசேடம்.

**(பாலபாடம் - மூன்றாம் புத்தகம்)**

## சிவயோக சுவாமிகளின் நற்சிந்தனை



ஒருபொல் லாப்பு மில்லையடா - தம்பி
உண்மை முழுதும் அறிந்திட்டடா
வருவதைக் கண்டு மகிழாதே - தம்பி
வஞ்சகப் பேச்சைத் தழுவாதே

கருமத் தைக்கை நெகிழாதே - தம்பி
கவலை கொண்டு கலங்காதே
தரும நெறியில் வழுவாதே - தம்பி
தன்னை யறிய எழுவாயே

அகர முதல எழுத்தெல்லாந் - தம்பி
அதுபோல் ஆதி யுலகுக்கடா
பகரில் அவனோ ஒருவனடா - தம்பி
பலபல வாகச் சொல்வாரடா

கற்றதனாற் பயன் இல்லையடா - தம்பி
கழல் அடியிணை கண்டிடடா
வெற்றிப் பேச்செல்லாம் விட்டிடடா - தம்பி
விதியை மதியால் வென்றிடடா

பொறி வழியினிற் செல்லாதே - தம்பி
போனதை யெண்ணிக் கொள்ளாதே
கிறியுங் கீழ்மையுஞ் செய்யாதே - தம்பி
கெட்டவன் மேல்நட்பு வையாதே

புத்தியை ஒன்றிலும் நாட்டாதே - தம்பி
புகழும் இகழுஞ் சூட்டாதே
எத்தொ ழிலைநீ செய்தாலுந் - தம்பி
ஈசனுக் கர்ப்பணம் பண்ணிடடா

வித்தாரப் பேச்சையும் விட்டிடடா - தம்பி
விருப்பு வெறுப்பை யகற்றிடடா
செத்தாரைப் போலத்தி ரிந்திடடா - தம்பி
சீவன் சிவனென்ற றிந்திடடா

நிகரொ ருவரும் இல்லையடா - தம்பி
நின்ற நிலையிற் பிரியாதே
ஆன்மா நாங்கள் அறிந்திடடா - தம்பி
ஆக்கை நாமன்று தெரிந்திடடா

வீண்பா வனையெல்லாம் விட்டிடடா - தம்பி
வேத நெறியிலே தொட்டிடடா
காண்பான் காட்சியு மில்லையடா - தம்பி
காணப் படும்பொரு ளில்லையடா

வாழி குருநாதன் வாழியடா - தம்பி
வாய்மை யடியாரும் வாழியடா
கேளிருஞ் சுற்றமும் வாழியடா - தம்பி
கேட்ட ரெல்லாரும் வாழியடா

18.04.2019 – குருபூசை தினம்

## உமாபதி சிவாச்சாரியார்

இவர் சைவ சித்தாந்த நூலாசிரியர்களுள் முக்கியமானவர். நாயன்மார்க்குப் பின்னர் சைவ சித்தாந்தக் கோட்பாடுகளைப் பரப்பியவர்களுள் ஒருவராக இவர் விளங்குகிறார். சைவர்களால் சந்தான குரவர்கள் என போற்றப்படும் நால்வருள் இவரும் ஒருவர்.

13ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலும், 14ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த இவர் சிதம்பரத்திலே தில்லைவாழ் அந்தணர் மரபில் பிறந்தவர். இவர் மெய்கண்ட தேவரின் மாணவரான மறைஞானசம்பந்தரைக் குருவாகக் கொண்டு அவரிடம் சைவ நூல்களைப் பயின்றவர். மெய்கண்ட சாத்திரங்களுள் அடங்கும் சிவப்பிரகாசம், திருவருட பயன், வினா வெண்பா, போற்றிப் ப∴றொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்னும் எட்டு நூல்கள் இவரால் இயற்றப்பட்டவை. இவைதவிர சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தைச் சுருக்கித் திருத்தொண்டர் புராண சாரம் என்னும் பெயரிலும், சேக்கிழாரின் வரலாற்றைச் சேக்கிழார் புராணம் என்னும் பெயரிலும் எழுதினார். சிதம்பரம் கோயிலின் வரலாற்றைக் கோயிற் புராணம் என்னும் பெயரில் நூறு பாடல்களால் பாடியுள்ளார். திருமுறை கண்ட புராணம், திருப்பதிக் கோவை என்னும் பிரபந்தங்களும் இவரால் இயற்றப்பட்டவையே. இவர்,சித்திரை மாதத்து அத்தம் நட்சத்திர தினத்தன்று இறையடி சேர்ந்தார்.

29.04.2019 – குருபூசை தினம்

## திருநாவுக்கரசு நாயனார்

திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூர் என்ற ஊரில் வேளாண்மரபில் புகழனார் - மாதினியார் என்பார்க்கும் புதல்வராக அவதரித்தவர் நாவுக்கரசர். இவருக்கு பெற்றோர் சூட்டிய பெயர் மருனீக்கியார் என்பதாகும்.

காலச்சூழல்நிலை காரணமாக மருனீக்கியார் சமண சமயத்தைச் சார்ந்தார். அவர் அங்கு பெரிதும் மதிக்கப்பெற்று தருமசேனர் என்ற பெயரையும் பெற்று வாழ்ந்து கொண்டிருந்தார். இவரது சகோதரி திலகவதியார், தன் தம்பியாகிய தருமசேனரை சைவ சமயத்திற்கு கொண்டுவருவதற்காக இறைவனை வேண்டிநின்றார். இந்த நிலையில், இறைவன் அவருக்கு சூலைநோயை உருவாக்கினார். நோயால் துன்புற்ற தருமசேனர் திலகவதியாரை வந்தடைந்தார். இறையருளால் சூலை நோய் நீங்கப்பெற்று, சைவ சமயத்தை சார்ந்து கொண்டார்.

இதனால், சமண சமயத்தைச் சேர்ந்த பல்லவ மன்னன் நாவுக்கரசரை பல நிலைகளில் துன்புறுத்தினான். சிவபெருமானை நினைத்து திருப்பதிகம் பாடி சகல துன்புறுத்தல்களையும் சமாளித்து வெற்றி கண்டார். இதன்பின் பல திருத்தலங்களையும் தரிசித்து மேலும் திருப்பதிகங்கள் பலவற்றை பாடியிருக்கிறார். இவர் திருநாவுக்கரசர், அப்பர், உழவாரத்தொண்டர் என பல பெயர்களால் அழைக்கப்பட்டார்.

இவரது தேவாரப் பாடல்கள் 4ஆம் 5ஆம் 6ஆம் திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. இவர் சித்திரை மாத சதயம் நட்சத்திர தினத்தன்று இறையடி சேர்ந்தார்.

## மருத்துவ சேவையில் 'அபயம்' சிறப்புறட்டும்

எங்கள் வடபுலத்தில் வைத்தியசாலைகளும் மருந்து விற்கும் நிலையங்களும் எங்கும் பரந்து கிடக்கின்றன. மக்கள் கூட்டமும் அங்குதான் கூடி நிற்கின்றது.

எனினும் வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகளும் சிகிச்சைகளும் எல்லோருக்கும் கிடைப்பதென்பது சாத்தியமற்றதாகவே உள்ளது. இதற்குப் பல காரணங்களை முன்வைக்கலாம்.

நிலைமை இதுவாக இருக்கையில், எம் மக்களுக்கு இன்று அவசர தேவையாக இருக்கின்ற மருத்துவ சேவைகளை ஓரளவுக்கேனும் வழங்கும் பொருட்டும், புலம்பெயர் நாடுகளில் இருக்கக்கூடிய எங்கள் மருத்துவ நிபுணர்களின் சேவை எங்கள் மக்களுக்குக் கிடைப்பதற்கு வசதியாகவும் சிவபூமி அமைப்பின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களின் முயற்சியில் ஆனைக்கோட்டை சுழாவடியில் 'அபயம்' என்ற இலவச மருத்துவ சேவை இன்று ஆரம்பித்து வைக்கப்படுகிறது.

இந்தப் புண்ணிய காரியம் சிறப்புற வேண்டும். இப் பணிக்கு நாம் அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் குறித்த மருத்துவ சேவையை மிகுந்த பயனுள்ளதாக ஆக்க முடியும்.

**(31.03.2019 வலம்புரி ஆசிரியத் தலையங்கத்திலிருந்து ஒருபகுதி)**

இம்மாதம் 11ஆம் திகதி குருபூசை தினம்

# ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்



இலங்கையின் முதலாவது சைவ ஆதீனம் என பெருமை பெறும் நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனத்தை ஸ்தாபித்த பெருமைக்குரியவர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள். இவர் யாழ். வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தின் வடக்கு வீதியில் வாழ்ந்து வந்த சிவப்பிராமணர் குலத்தைச் சேர்ந்த செல்லையா ஐயர் கனகாம்பாள் தம்பதியினருக்கு 1918ஆம் ஆண்டு பெப்ரவரி 8ஆம் திகதியன்று மூத்த புதல்வராகப் பிறந்தவர். இவருக்கு பெற்றோர் சூட்டிய பெயர் சிவசுப்பிரமணிய ஐயர் என்பதாகும்.

இவர் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் கல்வியை மேற்கொண்டு வரும் வேளையில் ஆங்கிலம், சமஸ்கிருதம் போன்ற பாடங்களை தனிப்பட்ட வகையில் கற்று வந்தார். அப்போது இவரது வீட்டிற்கு அடுத்த வீட்டில் இரு பெண் பிள்ளைகளுக்கு சங்கீத ஆசிரியர் ஒருவரை அழைத்து சங்கீதம் கற்பித்தார்கள். இவரும் வீட்டில் இருந்தவாறு அதனை ஆர்வத்துடன் கேட்டு வந்தார். சங்கீதத்தில் தீவிர ஈடுபாடு ஏற்படுவதற்கு இதுவே காரணமாக அமைந்துவிட்டது. கேள்வி ஞானத்தால் இவருக்கு இசைத்திறமை ஏற்பட்டது. சித்திரம் வரைவதிலும் இவர் திறமை பெற்றிருந்தார். இவர் ஒழுங்காகப் படித்து அரசாங்க உத்தியோகம் பெற வேண்டும் என இவரது தந்தையார் விரும்பியதால், இவர் சித்திரம் வரைவதையும் சங்கீதம் கற்பதையும் வெறுத்து வந்தார்.

இவரது மாணவப் பருவத்தில் சுவாமி விபுலானந்தர் முதலான பேரறிஞர்களை ஆசிரியர்களாக அடையப் பெறும் வாய்ப்புக் கிடைத்தது. அதன் காரணமாக நல்லதொரு சூழ்நிலையில் அறிவு வளர்ச்சி பெறவும் முடிந்தது.

தினந்தோறும் பாடசாலை ஆரம்பமாகும் போதும், நிறைவுபெறும் நேரத்திலும் தேவாரம் பாடும் பொறுப்பு இவருக்கு கிடைத்தது. யாழ். இந்துக் கல்லூரியில் உயர்கல்வியைத் தொடர்ந்த இவர் பதினெட்டாவது வயதில் சங்கீதத்தை முறையாகப் பயின்றார். அந்நாளில் யாழ்ப்பாணத்தில் கதாப்பிரசங்க நிகழ்ச்சிகள் அடிக்கடி இடம்பெற்று வந்தன. அதனையும் இவர் ஆர்வத்துடன் கேட்டு வந்தார். இதனால் கதையும் பாட்டும் கலந்து குட்டிக் கதாப்பிரசங்கங்களை தனது நண்பர்களுக்கு செய்து காட்டத் தொடங்கினார். பதினெட்டாவது வயதிலே வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் ஆவணி மூல நட்சத்திர நாளன்று முதலாவது கதாப் பிரசங்கத்தை நிகழ்த்தியிருக்கிறார்.

பாடசாலைக் காலத்தில் நாடகங்களிலும் நடித்து வந்துள்ளார். பின்னாளில் மாணவர்களுக்கு நாடகக் கலையில் பயிற்சியளிக்கும் சந்தர்ப்பமும் இவருக்கு கிடைத்தது. பல நாடகங்களை தயாரித்தும் வழங்கியிருக்கிறார். அதுமட்டுமன்றி "நர்த்தன கலாமன்றம்" என்ற பெயரிலான நிறுவனத்தை சொந்தமாக நடத்தி வந்ததுடன் அதனூடாக இலவசமாகவே நடனப் பயிற்சியை அளித்து பல நிதிகளுக்கும் உதவி வந்துள்ளார். சில வருடங்கள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றியதன் மூலம் கலை மற்றும் இசைத்துறையில் பெரும் பங்களிப்பை வழங்கியிருப்பதை சிறப்பாகக் குறிப்பிடலாம்.

இவருக்கு இலங்கை வானொலியில் பாடுவதற்கும் கதாப்பிரசங்கம் செய்வதற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதன்பின் கொழும்பு மற்றும் மலையகப் பகுதிகளில் மட்டுமல்ல மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலுமிருந்தும் கதாப் பிரசங்கம் நிகழ்த்துவதற்கு அழைப்புகள் வந்தன. இவரது சிறப்பான கதாப்பிரசங்கத்தை கேட்ட பெரியவர்கள் இவரை "மணிபாகவதர்" என செல்லமாக அழைக்கத் தொடங்கினர்.

இவர் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ் துறைகளிலும் சிறந்து விளங்கியதால் மதுரை ஆதீனம் "முத்தமிழ்மணி" என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்திருக்கிறது. மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தின் ஆடி வீதியில் நடைபெற்ற பாராட்டு விழாவொன்றில் இவருக்கு "புலவர் மணி" என்ற பட்டமும் கிடைத்தது.

நல்லை முருகப் பெருமானின் அருள்வாக்கிற்கு அமைய நல்லை நகரிலே சைவ ஆதீனமொன்றை அமைக்க வேண்டும் என்ற பெரு விருப்பும், இல்லற வாழ்விலிருந்து நீங்கி துறவறத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணமும் அமையப் பெற்றவராக மதுரை திருஞான சம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளிடம் சென்று 1966 ஆடிக் கார்த்திகை நட்சத்திர நாளில் துறவற நிலை பெற்று சீடரானார். ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள் என்ற துறவற நாமகரணம் பெற்றவராக இலங்கை திரும்பி, அதே ஆண்டு (1966) ஆவணி 6ஆம் நாளன்று யாழ். நல்லூரில் ஆதீனத்தை ஸ்தாபித்து முதலாவது குருமகா சந்நிதானமாக இருந்து சைவமக்களுக்கு சமய, ஆன்மீகப் பணிகளை மேற்கொண்டு வந்தார். சுவாமிகள் 1981 ஏப்ரல் 10ஆம் திகதி பங்குனி திருவாதிரை நட்சத்திர நாளன்று மகா சமாதியானார்.

06.04.2019 குருபூசை தினம்

# நல்லூர் தேரடி சித்தர் செல்லப்பா சுவாமிகள்



நல்லூர் கந்தசுவாமி கோயிலின் தேரடியை தமது இருப்பிடமாகக் கொண்டிருந்தவர் செல்லப்பா சுவாமிகள். இவர் சித்தர் பரம்பரையைச் சேர்ந்தவர். யாழ். பெரியகடைப் பகுதியில் நடமாடித்திரிந்த கடையிற் சுவாமிகள் என்ற சித்தரின் உத்தம சீடர்களுள் ஒருவர். இவர் உலகத்திற்கு தன்னைக் காட்டிக் கொள்ளாது வாழ்ந்து மறைந்த மகான். உலகத்தோர் கண்ணுக்கு பைத்தியக்காரன் போன்றே காட்சி அளித்தார். இவர் நீண்ட நேரம் தியானத்திலிருப்பார். எப்போதும் வாயினால் ஏதாவது முணுமுணுத்துக் கொண்டிருப்பார். அப்படி இருக்கும்போது அவர் வெறித்த பார்வையுடன் காட்சியளிப்பார். இதன் காரணமாக ஊர்மக்கள் இவரை "விசர்ச் செல்லப்பா" என அழைக்கலாயினர்.

நல்லைக்கந்தன் ஆலய தேர்முட்டி மண்டபத்திற்கு அருகில் காணப்படும் வில்வ மரத்தடியிலேயே இவர் தியானம் செய்வார். ஒரு நாள் இவர் தியானத்திலிருக்கும் போது ஓர் அன்பர் வந்து சுவாமிகளை அடிபணிந்தார். தம்மை மறந்த நிலையில் பக்திப் பரவசமாகி எல்லாம் துறந்த நிலையில் நின்றார். அப்போது செல்லப்பா சுவாமிகள் இந்த அன்பரைப் பார்த்து "யாரடா நீ"? என்று உரிமையோடு அதட்டிக் கேட்டார். பின்பு "உன்னுள்ளே பாரடா" என்றார். அதன் பின்னர் சில வினாடிகள் கழிய "பற்றெல்லாம் தீரடா" என்று கூறி "உள்ளே தேரடா" என்றார். அந்த நிமிடம் முதலாக அவருக்கு ஞானோதயம் உண்டாயிற்று. அவர்தான் யோகர் சுவாமிகள்.

செல்லப்பா சுவாமிகள் தனது சீடராக வந்த யோகர் சுவாமிகளுக்கு நான்கு மகா வாக்கியங்களை உபதேசித்தார். இந்த நான்கு வாக்கியங்களும் சகல சாஸ்திரங்களினதும் சாரம் கொண்டவை. எனவேதான் இவை மகா வாக்கியங்கள் என அழைக்கப்பட்டன. "ஒரு பொல்லாப்புமில்லை; எப்பவோ முடிந்த காரியம்; நாம் அறியோம்; முழுதும் உண்மை" என்பனவே அந்த வாக்கியங்களாகும்.

நல்லைக் கந்தன் ஆலயத்தின் முன்பாக தென்கிழக்கு மூலையில் செல்லப்பா சுவாமிகளின் நினைவாலயம் அமைந்துள்ளது.

# பன்முக ஆளுமைமிக்கவராக விளங்கிய ஜே.ஆர்.ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை

ஈழத்தின் முதல் தமிழ்ப் பத்திரிகை என்று சொல்லப்படும் 'உதயதாரகை' யின் ஆசிரியராகப் பணியாற்றியவர் ஜே.ஆர்.ஆர்னல்ட் சதாசிவம் பிள்ளை. இவர் 1820 அக்டோபர் 11ஆம் திகதி நவாலியூரில் பிறந்தவர். 1841ஆம் ஆண்டு இவருக்கு ஆசிரிய நியமனம் கிடைத்தது. 1854ஆம் ஆண்டு உடுவில் மகளிர் விடுதிப் பாடசாலையின் தலைமை ஆசிரியராகவும், பின்னர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரியிலும் பணியாற்றியிருக்கிறார்.

இவர் யாழ்ப்பாணத்திலிருந்து 1841ஆம் ஆண்டு முதல் வெளிவரத் தொடங்கிய 'உதயதாரகை' பத்திரிகையின் ஆசிரியராக 1857முதல் 35ஆண்டுகளுக்கு மேலாக சேவையாற்றி இருக்கிறார். இதன்போது சமய இலக்கிய ஆய்வுக்குரிய இதழாக உதயதாரகையை பிரகாசிக்கச் செய்த பெருமைக்குரியவராக இவர் போற்றப்படுகிறார்.

சிறுகதை, கட்டுரை, கவிதை, வரலாறு போன்றவைகளில் முத்திரை பதித்த ஜே.ஆர்.ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை, நன்னெறின் கதாசங்கிரம் என்னும் பெயரில் சிறுகதைத் தொகுதி ஒன்றை வெளியிட்டுள்ளார். ஈழத்து தமிழ்ப் புலவர்களை தமிழ் உலகுக்கு அறிமுகப்படுத்திய பெருமை இவரைச் சாரும். 'பாவலர் சரித்திர தீபகம்' (பகுதி - 1, பகுதி - 2) என்ற இவரது நூலின் ஊடாக 410 தமிழ்ப் புலவர்களின் வரலாற்றை எடுத்துச் சொல்லியுள்ளார். இதற்கும் மேலாக, வான சாஸ்திரம், விஞ்ஞானம், தத்துவஞானம், ஒழுக்கம், வரலாறு ஆகியன குறித்தும் பல படைப்புகளை வழங்கியிருக்கிறார். சாதாரண இதிகாசம், வானசாஸ்திரம் என்னும் பாடநூல்களையும் இவர் எழுதியுள்ளார். உரிச்சொல் நிகண்டு, திருச்சதகம், ஞானவெண்பா, நன்னெறிமாலை, நன்நெறிக் கொத்து போன்ற பல நூல்கள் இவரது ஆக்கங்களாக வெளிவந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

பைபிள் மொழிபெயர்ப்புக்காக இலங்கையில் இருந்து தமிழகம் சென்ற பேர்சிவல் பாதிரியார், ஆறுமுகநாவலர் முதலான பெருமக்கள் அடங்கிய குழுவில் இவரும் ஒருவராக இருந்துள்ளார். இவர் 1895 பெப்ரவரி 20ஆம் திகதி காலமானார். அடுத்த வருடம் இவரது ஜனன இருநூறு ஆண்டுகள் நிறைவாகும்.

## மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்



இந்த ஆலயம் மானிப்பாய் பட்டினத்தில் அமைந்துள்ளது. இது போர்த்துக்கேயர் காலத்திற்கு முற்பட்டது என்று சொல்லப்படுகிறது. ஆலயத்தின் அருகே மருதமரங்கள் சூழ்ந்து காணப்படுவதால், இந்தப் பூமி மருதடி என அழைக்கப்படுகிறது.

இந்த ஆலயத்தில், காலத்திற்குக் காலம் புனருத்தாரண வேலைகள் செய்யப்பட்டு, கும்பாபிஷேகப் பெருவிழாக்களும் இடம்பெற்று வந்துள்ளன. 2004ஆம் ஆண்டு வரை இங்கு 18 நாட்கள் வருடாந்த மகோற்சவம் நடைபெற்று வந்தது. 2004ஆம் ஆண்டு உற்சவத்தின் பின் பாரிய புனருத்தாரண வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆலயம் புதுப்பொலிவு பெற்று 2014ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இதன்பின் வருடாந்த மகோற்சவம் 25 நாட்களாக அதிகரிக்கப்பட்டது.

இந்த ஆலயத்தில் வருடந்தோறும் பங்குனி மாதத்தில் மகோற்சவம் ஆரம்பித்து, சித்திரைப் புதுவருடத் தினத்தன்று இரதோற்சவம் நடைபெறுவது வழக்கம்.

இவ்வருட மகோற்சவம் 22.03.2019 வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. இம்மாதம் 13ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 14ஆம் திகதி (புதுவருடப் பிறப்பு) தேர்த் திருவிழாவும், 15ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவிருக்கிறது.

## அவுஸ்திரேலியாவில் கவிஞர் அம்பியின் பிறந்தநாள் விழா

முதுபெரும் தமிழ் அறிஞரும் கவிஞருமான அம்பி அவர்களின் 90ஆவது பிறந்தநாள் விழாவும், கௌரவிப்பு நிகழ்ச்சியும் இம்மாத முதல் வாரத்தில் அவுஸ்திரேலியா சிட்னி நகரில் நடைபெறவிருக்கிறது.

## சுங்கத் திணைக்கள இந்து ஊழியர் சங்கம் நடாத்தும் பொன்விழா கட்டுரைப் போட்டி

இலங்கை சுங்கத் திணைக்கள இந்து ஊழியர் சங்கம் எதிர்வரும் மே மாதம் பொன்விழாவைக் கொண்டாடுகிறது. இதனையொட்டி அகில இலங்கை ரீதியில் மாணவர்களுக்கிடையிலான கட்டுரைப் போட்டியொன்றை ஏற்பாடு செய்து நடாத்துகிறது.

சுங்கத் திணைக்கள இந்து ஊழியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு.செ.சக்திதரன் மேற்படி போட்டி தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளார்.

மூன்று பிரிவுகளாக போட்டி நடாத்தப்படுகிறது. 6,7,8 ஆகிய தரங்களில் பயிலும் மாணவர்கள் ஆரம்ப பிரிவிலும், 9,10,11 ஆகிய தரங்களில் பயிலும் மாணவர்கள் மத்திய பிரிவிலும், 12, 13 ஆகிய தரங்களில் (க.பொ.த உயர்தரம்) பயிலும் மாணவர்கள் மேற்பிரிவிலும் பங்குகொள்ளலாம். பின்வரும் தலைப்பில் கட்டுரையை எழுதவேண்டும்

ஆரம்ப பிரிவு : சைவ வாழ்வில் நான் பெறும் மனமகிழ்ச்சி (150 சொற்களுக்கு மேற்படலாகாது)
மத்திய பிரிவு : எனது சமூக வாழ்வில் சைவத்தின் பங்களிப்பு (600 சொற்களுக்கு மேற்படலாகாது)
மேற் பிரிவு : எனது ஆளுமை விருத்தியில் சைவத்தின் பங்களிப்பு (750 சொற்களுக்கு மேற்படலாகாது)

கட்டுரைகள் சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்டு, பாடசாலை அதிபர் அல்லது ஆசிரியரின் கையொப்பத்துடன், பாடசாலை முத்திரை இடப்பட்டு உறுதிசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

போட்டியில் பங்குகொள்ளும் மாணவரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் போன்ற விபரங்கள் தனியானதொரு தாளில் தெளிவாக எழுதப்பட்டு கட்டுரையுடன் இணைக்கப்பட வேண்டும். கட்டுரை எழுதப்பட்ட தாள்களில் போட்டியாளரின் விபரம் எதுவும் குறிப்பிடலாகாது. கட்டுரை மாணவரின் சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும்.

கட்டுரைகள் 2019.04.15ஆம் திகதிக்கு முன்பதாக பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபால் ஊடாக அனுப்பி வைக்கப்படவேண்டும்.

S.Sakthitharan,
Superintendent of Customs
(Secretary, Customs Hindu Officers' Union)
Customs Headquarters,
No.40, Main Street,
Colombo - 11

படித்ததில் பிடித்தது

# இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கப்பட்ட வரலாறு

வீரகேசரி - வார வெளியீட்டில் 'வாசித்ததில் நேசித்தது' என்ற தலைப்பில் வாரந்தோறும் ஒவ்வொரு விஷயம் வெளிவருவது வழக்கம். ஏதாவது சஞ்சிகைகள் அல்லது பத்திரிகைகளில் வெளிவந்த முக்கியத்துவம் வாய்ந்த விஷயமொன்றை திரு.கே.வி.எஸ்.மோகன் அவர்கள் (முன்னர் மாதந்தோறும் வெளிவந்த 'கதம்பம்' சஞ்சிகையின் ஆசிரியராகவிருந்தவர்) எழுதிவருகிறார். இவர், வாசித்ததில் நேசித்ததாக குறிப்பிட்டு 2019 மார்ச் 24ஆம் திகதி வீரகேசரி - வார வெளியீட்டில் எழுதியிருந்த விஷயத்தை வாசித்த காரைநகர் வியாவில் என்ற முகவரியைச் சேர்ந்த திரு.க.கோபாலபிள்ளை, இதனை தனக்குப் படித்ததில் பிடித்ததாக 'சிவபூமி' பத்திரிகைக்கு அனுப்பி வைத்துள்ளார்.

1947 ஆகஸ்ட் 15இல் இந்தியா எப்படி சுதந்திரம் பெற்றது? மௌண்ட் பேட்டன், நேருவை அழைத்து உங்கள் இந்தியாவிற்கு சுதந்திரம் கொடுக்கப் போகிறோம். அதை எப்படிக் கொடுப்பது? என்று கேட்க, நேருவுக்கு குழப்பமாக இருந்தது. எதை அடையாளமாக வைத்து சுதந்திரத்தைப் பெறுவது? (பிரிட்டிஷ் அரசு இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கியது என்பதற்கு எந்த சாசனமும் இல்லை) உடனே நேரு, மூதறிஞர் ராஜாஜியை அணுகி "எனக்கு இந்த நடைமுறைகள் தெரியாது. அதனால் தாங்கள்தான் தீர்வு கூற வேண்டும்" என்று சொல்ல, உடனே ராஜாஜி "கவலை வேண்டாம், எங்கள் தமிழகத்தில் மன்னர்களிடம் ஆட்சி மாற்றம் ஏற்படும்போது ராஜகுருவாக இருப்பவர், செங்கோலைப் புதிய மன்னருக்குக் கொடுத்து ஆட்சி மாற்றம் செய்வார். நாமும் அந்நியன் கையால் சுதந்திரம் பெறுவதை விட குரு மகானின் கையால் செங்கோலைப் பெற்று ஆட்சி மாற்றம் அடையலாம்" என்றார். நேருவும் "நேரம் குறைவாக உள்ளது. உடனே ஏற்பாட்டை செய்யுங்கள்" என்று உத்தரவிட்டார்.

ராஜாஜி உடனே திருவாவடுதுறை ஆதீனத்தைத் தொடர்பு கொண்டு விஷயத்தை சொல்ல அப்போது கடும் காய்ச்சலில் இருந்த ஆதீனம் அவர்கள், உடனே முறையாக செங்கோல் தயாரித்து தங்க முலாம் பூசி இளைய ஆதீனம் தம்பிரான் பண்டார சுவாமிகளிடம் பொறுப்பை ஒப்படைத்து கூடவே ஓதுவார் மூர்த்திகளையும் உடன் அனுப்பி வைத்தார். (தேவாரத்தில் இருந்து கோளறு பதிகம் பதினொரு பாடல்களை குறித்துக் கொடுத்தார். இந்த பாடல்களை அப்போது ஓதுவார் மூர்த்திகள் பாடவேண்டும்) ராஜாஜி அனுப்பிய தனி விமானத்தில் அவர்கள் செங்கோலுடன் டில்லி போய் சேர்ந்தனர். அப்போது ஆயிரம் ஆண்டு அடிமைத் தளையில் இருந்து பாரதத்தின் விடுதலை பெறும் விழாவிற்காக எல்லோரும் காத்திருந்தனர்.

அந்த சுதந்திர வைபவ தினத்தில் மௌண்ட் பேட்டனிடம் இருந்து செங்கோலை குருமகா சன்னிதானம் திருவாவடுதுறை ஆதீனம் தம்பிரான் பண்டார சுவாமிகள் பெற்று, செங்கோலுக்கு புனித நீர் தெளித்து ஓதுவார் மூர்த்திகள் "வேயுறு தோளி பங்கன்" என்று துவங்குகிற தேவார திருப் பதிகத்தைப் பாட பதினோராவது பாடலின் கடைசிவரி, "அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே".. இந்த வரியைப் பாடி முடிக்கும் போதுதான் சுவாமிகள் செங்கோலை நேருவிடத்தில் கொடுத்தார். இந்த நிகழ்வைத்தான் இந்தியா சுதந்திர தினமாக கொண்டாடுகிறது.

இந்த நிகழ்வு தமிழுக்கும், தமிழகத்திற்கும் எவ்வளவு பெருமை. திருவாவடுதுறை ஆதீன மடத்தில் இந்த செங்கோல் வைபவம் கறுப்பு வெள்ளை புகைப்படமாக உள்ளது. புகைப்படத்தில் 15.08.1947 என்று திகதியிட்டு இருப்பதையும், நேரு கையில் செங்கோலுடன் இருப்பதையும், தம்பிரான் பண்டார சுவாமிகள் அருகில் உள்ளதையும் காணலாம்.

# 'சித்தர்களும் சிவபூமி மண்ணின் எழுகோலமும்' நூல் வெளியீடு

உலகப் பெருமஞ்சம் நிறுவிய பெரிய சந்நியாசியாரின் 102 ஆம் ஆண்டு நினைவு விழாவும், கலாபூஷணம் மூ.சிவலிங்கம் அவர்கள் எழுதிய 'சித்தர்களும் சிவபூமி மண்ணின் எழுகோலமும்' என்ற நூல் வெளியீட்டு விழாவும் இம்மாதம் 6ஆம் திகதியன்று பிற்பகல் 3.00 மணிமுதல் இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாத சிவசுப்பிரமணியர் மண்டபத்தில் நடைபெற்றது.

சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களது தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் பிரதம விருந்தினராகவும், பேராசிரியர் இ.விக்கினேஸ்வரன், பேராசிரியர் க.தேவராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டார்கள்.

செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் அவர்கள் நூலின் வெளியீட்டுரையையும், பெரிய சந்நியாசியாரின் 102ஆம் ஆண்டு நினைவுரையை கலாநிதி க.ஶ்ரீகணேசன் அவர்களும் ஆற்றினார்கள்.

# நீர்வேலி கந்தசுவாமி கோயில்



நீர்வேலி கிராமத்தின் தெற்குப் பகுதியில் எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானின் திருக்கோயில் இருநூறு ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றுப் பெருமைமிக்கது. கடம்ப மரத்தை தலவிருட்சமாகக் கொண்டது இந்த ஆலயம்.

இருநூறு ஆண்டுகளுக்கு முன் இந்த கிராமத்தைச் சேர்ந்த கந்தயினார் என்ற பெயருடைய பெரியார் ஒருவர் கதிர்காமக் கந்தனை தரிசிக்க விருப்பம் கொண்டு, மகோற்சவ காலத்தில் பாதயாத்திரையாகச் சென்றபோது, வழியில் யானையொன்று துரத்தவே, அவர் காட்டிற்குள் ஓடி, வழிதெரியாது அலையலானார். இறுதியில் களைப்பும், பசியும் மிகுந்தவராக மரம் ஒன்றின் கீழ் நித்திரையில் ஆழ்ந்திருந்த வேளையில், அவர் முன்னால் துறவி ஒருவர் தோன்றி, வேல் ஒன்றை அவர் கையில் கொடுத்து, கதிர்காமக் கந்தனை சென்றடைவாய் என்று கூறி மறைந்துவிட்டார். அந்தப் பெரியவரும் கதிர்காமம் சென்று கந்தனை தரிசித்த பின்னர், நீர்வேலி திரும்பி, சிறு ஆலயமொன்றை அமைத்து அந்த வேலாயுதத்தையும் ஸ்தாபித்தார். இது வேற்கோட்டம் என்று அழைக்கப்பட்டு வந்ததாக சொல்லப்படுகிறது.

இதேவேளையில், தென்மராட்சி பகுதியில் கொடிகாமம் என்னும் இடத்தில் கந்தப் பெருமானுக்கு ஆலயம் ஒன்று அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு முருகன் விக்கிரகமொன்று உருவாகப்பட்டிருந்தும், பிரதிஷ்டை செய்யப்படாதிருந்தது. அந்த விக்கிரகம் அவ்விடத்து அடியவர் ஒருவரின் இல்லத்தில் நெற்கூடையினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அந்த விக்கிரகத்தை நீர்வேலி கிராமத்தைச் சேர்ந்த கந்தயினார், நல்லயினார் என்னும் இருவர் சிறிது பணம் கொடுத்துப் பெற்றுக் கொண்டு வந்து வேற்கோட்டம் அமைந்திருந்த இடத்திலிருந்து 300 யார் தொலைவில் 1852ஆம் ஆண்டு ஆலயம் அமைத்து, அங்கு குறித்த விக்கிரகத்தை முறைப்படி பிரதிஷ்டை செய்து, கும்பாபிஷேகத்தையும் நடத்துவித்தனர். வேற்கோட்டத்திலிருந்த வேலாயுதமும் புதிய ஆலயத்தில் குடிபுகுந்தது.

அன்று முதலாக, ஆலயம் வளர்ச்சி பெற்று வந்தது. அவ்வப்போது புனருத்தாரண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு, கும்பாபிஷேக பெரு விழாக்களும் காலத்துக்குக் காலம் நடத்தப்பட்டு வந்தன. சித்திரா பௌர்ணமியை தீர்த்தத் திருவிழாவாகக் கொண்டு மகோற்சவம் இடம்பெற்று வந்தது. ஆலயத்தில் புராணப் படிப்பும் நடந்து வந்தது.

தமிழ்நாட்டு அறிஞரும், 'கலைமகள்' சஞ்சிகையின் ஆசிரியருமான திரு.கி.வா.ஜெகந்நாதன் அவர்கள் 1956ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணம் வரும்போது நீர்வேலி கந்தசுவாமி ஆலயம் வந்து சொற்பொழிவு ஆற்றுவது வழக்கம். திருச்சி பேரறிஞர் இராதாகிருஷ்ணன் அவர்களும் இங்கு உரையாற்றியிருக்கிறார்.

ஆலயத்தின் பிரதம குருவாக சிவஸ்ரீ இராசேந்திரக் குருக்கள் பணியாற்றிய காலம் சிறப்பித்துப் போற்றப்படுகிறது. இங்கு 1999 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. சிவஸ்ரீ இராசேந்திரக் குருக்கள் 2000 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இறையடி சேர்ந்துவிட்டார். அதன்பின் இவரது புதல்வரான சிவஸ்ரீ சுவாமிநாதக் குருக்கள் ஆலய பூசைக் கருமங்களை ஆற்றி வருகிறார்.

இந்த ஆலயத்தில் மீண்டும் மேற்கொள்ளப்பட்ட புனருத்தாரண வேலைகளைத் தொடர்ந்து, பஞ்சதள இராஜகோபுரம், மணிக்கோபுரம் என்பன அமைக்கப்பட்டு 2010ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

இவ்வருட மகோற்சவம் இம்மாதம் முதலாம் திகதியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. எதிர்வரும் 17ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 18ஆம் திகதி இரதோற்சவமும், மறுநாள் 19ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறவிருக்கிறது.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே! (கந்தரநுபூதி)

**25.04.2019 – நினைவு தினம்**

# காரைநகர் கலாநிதி க.வைத்தீசுவரக் குருக்கள்



கலாநிதி கணபதீஸ்வரக் குருக்கள் வைத்தீசுவரக் குருக்கள் 1916 செப்ரெம்பர் 22ஆம் திகதி பிறந்தவர். இவர் காரைநகர் வலந்தலை வடக்கு அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும், காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையில் இடைநிலைக் கல்வியையும், காரைநகர் இந்து ஆங்கிலப் பாடசாலையில் ஆங்கிலக் கல்வியையும், பின்னர் அளவெட்டி நாகபூஷணி வித்தியாலயத்திலும் (இப்போது அருணோதயா கல்லூரி) கற்று சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திர பரீட்சையில் சித்தியடைந்தார்.

சுன்னாகம் பிராசீன பாடசாலையில் சமஸ்கிருதமும் தமிழும் படித்து சமஸ்கிருதத்தில் பிரவேச பண்டிதர் பரீட்சையிலும், தமிழில் பால பண்டிதர் பரீட்சையிலும் சித்திபெற்றார். இக்காலப் பகுதியில் சனி, ஞாயிறு, ஆகிய நாட்களில் சுன்னாகம் குமாரசாமிப் புலவரின் மாணவனாகிய வித்தகர் ச.கந்தையாபிள்ளையிடம் சைவ சித்தாந்த சாஸ்திரங்களையும், மகா வித்துவான் சி.கணேசையரிடம் தமிழ் இலக்கணத்தையும் முறையாகக் கற்றார்.

இவர் 1940ஆம் ஆண்டு கொழும்பு விவேகானந்தா வித்தியாலயத்தில் ஆசிரியராக நியமனம் பெற்றார். தொடர்ந்து நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஆசிரியராகப் பணியாற்றி 1971ஆம் ஆண்டு ஓய்வுபெற்றார்.

கொழும்பு விவேகானந்த சபையினரால் நடத்தப்பட்ட சைவ சமய பரீட்சைக்கான குழுவில் உறுப்பினராகவிருந்து வினாத்தாள் தயாரித்தல் பணிகளில் பங்களிப்பு வழங்கினார். தினகரன் நாளிதழ் அலுவலகத்திலும் பகுதிநேர அடிப்படையில் பணியாற்றியுள்ளார்.

இவர் யோகர் சுவாமிகளின் ஆசியுடன் 1940 ஜனவரி முதலாம் திகதியன்று காரைநகர் மணிவாசகர் சபையை தொடங்கினார். 1960 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகத்தையும் ஆரம்பித்து நடத்தி வந்துள்ளார்.


காரைநகர் மணிவாசகர் சபை 1955ஆம் ஆண்டிலிருந்து வருடந்தோறும் திருவெம்பாவை நாட்களில் மணிவாசகர் விழாவினை நடத்திவருகிறது. 1970ஆம் ஆண்டு மணிவாசகர் விழாவின்போது தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாருக்கு சிவத்தமிழ்ச்செல்வி என்ற பட்டமளித்து சிறப்பிக்கப்பட்டது. இதன்பின்னர் அம்மையாருக்கு பல பட்டங்கள் கிடைத்தபோதிலும் மணிவாசகர் சபையினர் வழங்கிய இந்தப் பட்டமே அவரது பெயருடன் நிரந்தரமாக இணைந்துகொண்டது சிறப்புக்குரியது.

கலாநிதி வைத்தீசுவரக் குருக்கள் பல நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். இவருக்கு 2002ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகம் தத்துவக் கலாநிதி பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது. அகில இலங்கை கம்பன் கழகம் 1995ஆம் ஆண்டு 'முதறிஞர்' என்ற பட்டம் வழங்கி கௌரவித்திருந்தது. இவை தவிர கலைஞானகேசரி, சிவாகம கிரியாபூஷணம் போன்ற பல பட்டங்களும் விருதுகளும் இவருக்கு கிடைத்துள்ளன. 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு திருவாவடுதுறை ஆதீனமும் இவருக்கு விருது வழங்கி கௌரவித்துள்ளது.

காரைநகர் மக்களால் மட்டுமே அறியப்பட்டிருந்த திண்ணபுரம் சிவன் கோயிலில் வீற்றிருக்கும் நடராஜப் பெருமானை தமிழகத்தின் சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கும் நடராஜ மூர்த்தியின் வடிவமாகக் கண்டு, இக்கோயிலுக்கு 'ஈழத்துச் சிதம்பரம்' எனப் பெயர் சூட்டி மகிழ்ந்ததுடன், தனது தந்தையார் கணபதீஸ்வரக் குருக்களைக் கொண்டு இக்கோயிலின் தல வரலாற்றைத் தொகுத்து 1961ஆம் ஆண்டு 'ஈழத்துச் சிதம்பரம்' என்ற பெயரில் நூல் வெளியிட்டு உறுதிப்படுத்தினார். ஈழத்துச் சிதம்பரம் என்பது இன்று உலகம் அறிந்த பெயராக முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது.

இவர் 2015 ஏப்ரல் 25ஆம் திகதியன்று தனது 99ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

நாளென் செயும்வினை தானென்
செயும் எனை நாடிவந்த
கோளென் செயும்கொடுங் கூற்(று) என்
செயும் குமரேசர் இரு
தாளும் சிலம்பும் சதங்கையும்
தண்டையும் சண்மு கமும்
தோளும் கடம்பும் எனக்குமுன்
னேவந்து தோன்றி டினே!



(கந்தரலங்காரம்)

141 ஆவது பிறந்ததின நினைவு

# வித்துவசிரோமணி சி.கணேசையர்



பா.துவாரகன்

புன்னாலைக்கட்டுவன் கிராமத்தில் ஆயாக்கடவை சித்திவிநாயகர் தேவஸ்தான ஸ்தாபக பரம்பரை அந்தணர் வழிவந்த சின்னையர் என்னும் அந்தணப் பெரியாருக்கும், அக்காலத்தில் பிரபல சோதிடராக விளங்கிய, வருத்தலைவிளான் யோகவன ஐயரின் சகோதரியும் வேலாயுத ஐயரின் மகளுமான சின்னம்மாள் என்பவருக்கும் ஒரே மகனாகவும் ஐந்தாவது பிள்ளையாகவும் கணேசையர் 26.03.1878 இல் பிறந்தார்.

செந்தமிழ் வழங்கும் ஈழத்தின் நல்லைநகர் ஆறுமுகநாவலர், வித்துவ சிரோமணி ந.ச.பொன்னம்பலபிள்ளை, இராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை, தி.த.கனகசுந்தரம்பிள்ளை, சபாபதி நாவலர், அம்பலவாண நாவலர், மகாவித்துவான் நா. கதிரைவேற்பிள்ளை, உரையாசிரியர் ம.க.வேற்பிள்ளை, சுவாமிநாத பண்டிதர், காசிவாசி செந்திநாதையர் முதலாகப் பலர் தென்னிந்தியா சென்று தமிழ்ப் பணிபுரிந்து ஈழமண்டலத்தின் புகழை நிறுவினர். சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர் முதலாகப் பலர் யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டே தமது வித்துவத் திறமையால் தமிழ்நாடெங்கும் புகழ் பரப்பினர். இவர்கள் வரிசையிற் பிற்காலத்தில் வைத்து மதிக்கப்படுபவர் வித்துவசிரோமணி சி.கணேசையர் ஆவர்.

கணேசையர் அவர்கள் சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவர், ந.ச.பொன்னம்பலபிள்ளை ஆகியோரைத் தமது ஆசிரியர்களாகக் கொண்டவர். இவர் இயற்றிய தொல்காப்பிய உரை விளக்கக் குறிப்புக்கள் அவருக்குப் புகழைத் தேடித் தந்தது. இதனால் ''தொல்காப்பியக்கடல்'' என்று புகழப்பட்டார். தொல்காப்பிய உரைகளின் ஏட்டுப் பிரதிகளைத் தேடி எடுத்து அவற்றை ஒப்புநோக்கி பல ஆண்டு காலமாகக் குறிப்புக்கள் எழுதி வந்தார். தான் கண்ட பிழைகளின் திருத்தங்களை அவ்வப்போது பத்திரிகைகளில் வெளிப்படுத்தி அறிஞர்களின் ஒப்புதலையும் பெற்றார். இறுதியாக விளங்காத பகுதிகளுக்குக் குறிப்புகளும் எழுதி அந்நூலுரைகளைத் திருத்தமாக அச்சிற் பதிப்பித்து வெளியிட்டார்.

கணேசையர் ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம், சுன்னாகம் அ.குமாரசாமிப் புலவரின். வாழ்க்கை வரலாறு முதலான பிற நூல்களையும் எழுதியுள்ளார். செந்தமிழ், வித்தகம் முதலான இதழ்களிலும் அக்காலத்தில் வெளிவந்த சிறப்பு மலர்களிலும் ஏராளமான இலக்கண, இலக்கிய, சமய வாழ்வியல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார். யாழ்ப்பாணத்திற்கே தனித்துவமான கந்தபுராணப் படிப்புக்களில் கலந்து கொள்ளல் போன்ற செயற்பாடுகளிலும் ஈடுபட்டார். இவரது ஆற்றலையும் தொண்டுச் சிறப்பையும் கௌரவிக்கு முகமாக 08.10.1938 அன்று யாழ். வண்ணை வைத்தீசுவராக் கல்லூரியில் விழா ஏற்பாடு செய்யப்பட்டது. அறிஞர் பலரும் பிரபுக்களும் பெருந்திரளாகக் கூடி யாழ்ப்பாணம் சிவன் ஆலயத்திலிருந்து கணேசையரை ஊர்வலமாக விழா மண்டபத்துக்கு அழைத்துச் சென்றனர்.

"அக்காலத்தில் அரசாங்க சபைத் தலைவராக விளங்கிய கௌரவ சேர்.வை.துரைசுவாமி அவர்களைத் தலைவராகக் கொண்டு பிற்காலத்தில் மந்திரியாக விளங்கிய கௌரவ சு.நடேசபிள்ளை, விபுலானந்த அடிகள், வண.ஞானப்பிரகாசர், பண்டிதர் ம.வே.மகாலிங்கசிவம், வியாகரண மகோபாத்தியார் பிரம்மஸ்ரீ வை. இராமசுவாமி சர்மா, பகுதி வித்தியாதரிசி முகாந்திரம், எஸ்.கந்தையா முதலாய பெரியோர்கள் வீற்றிருந்த அலங்காரமிக்க மேடையில் ஐயரவர்கள் நடுநாயகமாக இருத்தப்பட்டனர். அறிஞர் பலரும் ஐயரவர்களின் ஆற்றலையும் தொண்டையும் குணநலன்களையும் வியந்து பேசி இரண்டாயிரம் ரூபாய்கொண்ட பொற்கிழியையும் பரிசாக வழங்கினர். இதுபோன்றதொரு கௌரவ விழா யாழ்பாணத்தில் இதற்கு முன்பும் பின் இன்றுவரையும் நிகழ்ந்ததில்லை". என்று 1977 இல் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி தமிழ் மன்றத்தால் வெளியிடப்பட்ட வித்துவசிரோமணி சி.கணேசையர் ஞாபகார்த்த மலரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வித்துவசிரோமணி மகாவித்துவான் சி.கணேசையர் அவர்களது ஜென்ம தினமாகிய பங்குனி மாத பூராட நட்சத்திரத்தில் (29.03.2019) வருத்தலைவிளான் மருதடிப் பிள்ளையார் கோயில் வளாகத்தில் அமைந்துள்ள கணேசையர் அவர்களது சமாதித் திருக்கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள காசிபாண லிங்கத்துக்கு விசேட அபிஷேகம் நடைபெற்றது.

நல்லை ஆதீன சிவாசாரியார் பண்டிதர் கலாநிதி து.கு. ஜெகதீஸ்வரக்குருக்கள் அவர்களது வழிகாட்டலில் புன்னாலைக்கட்டுவன் சிவத்திரு பா.சுந்தரராஜசர்மா, வருத்தலைவிளான் சிவத்திரு மயூரசர்மா ஆகியோர் அபிஷேகம் முதலான கிரியைகளைச் செய்து மகாவித்துவானை நினைந்து வழிபாடு செய்தனர்.

# ஒளியின் சிறப்பும் குத்து விளக்கேற்றலின் முக்கியத்துவமும்

**கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்**

சைவமக்கள் ஒளியை இறைவனாக வழிபடுபவர்கள். சிவனை, "சொற்றுணை வேதியன், சோதி வானவன்" ஆகத் தரிசிப்பவர்கள். ஒளியானது இருளை அகற்றுகிறது. அத்துடன் எல்லாப் பொருள்களையும் வெளிப்படையாகக் காட்டுகிறது. சூரியன், சந்திரன், அக்கினி என்பன முச்சுடர்கள். அவை ஒளியைத் தந்து உயிர்களை வாழ்விப்பவை. எனவே, அவற்றையும் கடவுளராக வழிபாடு செய்கின்றோம். நல்லன செய்யும் அனைத்தும் தெய்வாம்சம் பொருந்தியவை. ஆகவே, அவை வணக்கத்திற்குரியவை. ஒளி நன்மை பயப்பதால், வழிபாட்டிற்கும் வணக்கத்திற்கும் உரியது ஆகின்றது.

சைவர்கள், காலையிலும் மாலையிலும் வீட்டில் விளக்கேற்றி வழிபாடு செய்யும் வழக்கத்தை உடையவர்கள். குத்துவிளக்கினை மகாலட்சுமியாகவும் ஆராதிப்பார்கள். மகாலட்சுமி எல்லாவித செல்வங்களையும் எமக்கு வழங்குபவள். "பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை" என்கிறது வள்ளுவர் மறை. இம்மை வாழ்வில் இன்பம் அடைவதற்குப் பொருட் செல்வம் தேவை என்பதை யாவரும் ஏற்றுக்கொள்வர். செல்வத்திற்கு அதிபதியாகிய மகாலட்சுமியை குத்துவிளக்கில் தரிசிக்கிறோம்.

குத்துவிளக்கினை ஏற்றியபின், அதனை ஊடு பற்ற விடுதல் கூடாது. ஊடுபற்றுதல் என்பது எண்ணெய் இல்லாமல் திரி காய்ந்து எரிதலும் புகைத்தலும் ஆகும். குத்துவிளக்கு எரிந்துகொண்டிருக்கும் போது சிலர் வாயினால் ஊதி அணைப்பதைக் காண்கிறோம். அவ்வாறு செய்தல் தவறாகும். எந்தத் தீபத்தையும் வாயினால் ஊதி அணைத்தல் ஆகாது.

வைபவங்களைத் தொடங்கும்போது குத்து விளக்கு ஏற்றிவைக்கும் வழக்கம் சைவ மக்களிடையே காணப்படுகிறது. இது தொன்று தொட்டு இருந்து வரும் மரபு ஆகும். சமய விழாக்கள் கிரியைகள், சடங்குகள் என்பவற்றை நடாத்தத் தொடங்கும் போதும் சரி, சமூக விழாக்கள், நிகழ்ச்சிகள், வைபவங்கள் என்பவற்றை ஆரம்பிக்கும் போதும் சரி குத்துவிளக்கு முதலில் ஏற்றப்படுகிறது. அதற்குப் பூஜை, வழிபாடு நிகழ்த்தப்படுகிறது. சூரிய ஒளி கிடைக்கும் பகல் நேரத்திலும் கூடக் குத்து விளக்கு ஏற்றப்படுகிறது.

நாட்காரியங்கள் செய்யத் தொடங்கும் போதும், திறப்பு விழாக்கள், கலை விழாக்கள், மங்கல நிகழ்வுகளை நடாத்த ஆரம்பிக்கும் போதும் குத்து விளக்கு ஏற்றப்படுவது ஏன், என்று பலர் வினா எழுப்புகிறார்கள். மரபு, சம்பிரதாயம், பாரம்பரியம் யாவும் காரணத்துடன் தான் தோன்றியிருக்க வேண்டும்.

ஒளி, அறிவை உணர்த்தும் சின்னம். இறைவன் பேரறிவாளன். அறிவின் ஊற்று இறைவனே. எல்லாவித அறிவிற்கும் மூலதத்துவமாக விளங்கும் இறைவனை, ஒளிமயமாக வழிபட்டுக் கருமங்களை ஆரம்பிக்கின்றோம். இறைவனை முன்வைத்து ஆற்றும் கருமங்கள் நீதியாக அமையும். ஆதலால் வெற்றி பெறுகின்றன.

ஒளி இருளை அகற்றும்; அறிவொளி அறியாமையை நீக்கும். அறியாமை அகன்று விட்டால், நாம் எடுத்த கருமங்களுக்குக் குறுக்கே அறியாமையால் ஏற்படுகின்ற இடர்ப்பாடுகள், இடையூறுகள் அகற்றப்பட்டுவிடும். அறிவொளியின் துணையால் எல்லாக் காரியங்களும் இனிது நிறைவேறும். இதனை உணர்த்தவே குத்து விளக்கு ஏற்றப்படுகிறது. ''இறைவனை விசாரித்துக் காரியத்தைத் தொடங்கு; உணர்ச்சிவயப்படாமல், அறிவுவயப்பட்டு, அறிவின் வழிகாட்டலில் கருமங்களைச் செய்" என்னும் கருத்துக்கள் தொனிக்கின்றன. விளக்குத் திரி தன்னை எரித்து, உலகிற்கு ஒளியூட்டுகிறது. தியாகமும் தன்னலமின்மையும் இங்கு உணர்த்தப்படுகிறது. "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பர் வாக்கையும், "பணிபுரி பலனை எதிர்பாராதே" என்ற பகவத் கீதை மகுட வாசகத்தையும், குத்து விளக்கேற்றுதல், கருமத்தின் ஆரம்பத்திலேயே நமக்கு உணர்த்துவதாக அமைகின்றது.

விளக்குச் சுடர் எப்போதும் மேல் நோக்கியதாகவே உள்ளது. அதுபோன்று எமது எண்ணங்கள், பேச்சுக்கள், செயல்கள் யாவும் மேல்நோக்கியனவாயும், உயர்ந்தனவாயும் இருத்தல் வேண்டும். ஒரு விளக்கிலிருந்து பல விளக்குகள் ஏற்றப்படலாம். நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டுப் பெய்யும் மழை எல்லோர்க்கும் கிடைக்கின்றதல்லவா! குத்து விளக்கு ஏற்றல் ஆனது நமக்குப் பல ஆன்மீக, உலகியல் உண்மைகளை உணர்த்துகிறது என்பதைத் தெரிந்து கொள்வோம்.

**(சைவ நற்சிந்தனைக் களஞ்சியம்)**

**விளக்கினால் பெற்ற இன்பம் மெழுக்கினால் பதிற்றியாகும்**
**துளக்கில் நன்மலர் தொடுத்தால் தூய விண் ஏறல் ஆகும்**
**விளக்கு இட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானம் ஆகும்**
**அளப்பில கீதம் சொன்னார்க்கு அடிகள்தாம் அருளுமாறே!**

**(தேவாரம்)**

# தோட்டத்து காவல்காரன் கத்தரி வெருளி

**நவாலியூர் சோமசுந்தரப் புலவர்**



முன்னைய காலத்தில் தோட்டங்களின் மத்தியில் பொம்மை ஒன்றை காட்சிப் பொருளாக வைத்திருப்பதை பலரும் வழமையாகக் கொண்டிருந்தனர். தோட்டங்களில் உற்பத்தி செய்யப்படும் பயிர்வகைகளைப் பார்ப்பவர்களினால் கண்ணூறு, நாவூறு வராமல் காப்பதற்கு இத்தகைய பெரும் பொம்மைகளை வைப்பது விவசாய மக்களது வழக்கம். பானை, பழந்துணிகள், வைக்கோல், தடிகள் என்பன கொண்டு இத்தகைய பொம்மைகளை வடிவமைப்பார்கள். இதனை 'வெருளி' எனவும் சிறப்பாகக் குறிப்பிடுவர்.

நவாலி கிராமத்திலுள்ள விவசாயி ஒருவர் கத்தரி தோட்டமொன்றை நடாத்திக் கொண்டிருந்தார். இந்த தோட்டத்தின் மத்தியில் வைக்கப்பட்டிருந்த வெருளியைக் கண்டு கொண்ட சோமசுந்தரப் புலவர் அவர்கள், வியந்து பாடிய பாடல் இது.

கத்தரித் தோட்டத்து மத்தியிலே நின்று
காவல் புரிகின்ற சேவகா! - நன்று
காவல் புரிகின்ற சேவகா!
மெத்தக் கவனமாய்க் கூலியும் வாங்காமல்
வேலை புரிபவன் வேறுயார்! - உன்னைப்போல்
வேலை புரிபவன் வேறுயார்?

கண்ணு மிமையாமல் நித்திரை கொள்ளாமல்
காவல் புரிகின்ற சேவகா! - என்றும்
காவல் புரகின்ற சேவகா!
எண்ணி உன்னைப்போல் இரவுபகலாக
ஏவல் புரிபவன் வேறுயார்? - என்றும்
ஏவல் புரிபவன் வேறுயார்?

வட்டமான பெரும் பூசினிக் காய்போல
மஞ்சள்நிற உறுமாலைப்பார்! - தலையில்
மஞ்சள்நிற உறுமாலைப்பார்!
கட்டியிறுக்கிய சட்டையைப் பாரங்கே
கைகளில் அம்பொடு வில்லைப்பார்!
கைகளில் அம்பொடு வில்லைப்பார்!

தொட்டு முறுக்காத மீசையைப்பார்! கறைச்
சோகிபோலே பெரும் பல்லைப்பார்! - கறைச்
சோகிபோலே பெரும் பல்லைப்பார்!
கட்டிய கச்சையில் விட்டுச் செருகிய
கட்டை உடைவாளின் தேசுபார்! - ஆகா
இரு கட்டை உடைவாளின் தேசுபார்!

பூட்டிய வில்லுங் குறிவைத்த பாணமும்
பொல்லாத பார்வையுங் கண்டதோ? - உன்றன்
பொல்லாத பார்வையுங் கண்டதோ?
வாட்ட மில்லாப்பயிர் மேயவந்த பசு
வாலைக் கிளப்பிக்கொண் டோடுதே - வெடி
வாலைக் கிளப்பிக்கொண் டோடுதே!


கள்ளக் குணமுள்ள காக்கை உன்கைக்கண்டு
கத்திக் கத்திக் கரைந்தோடுமே - கூடித்
கத்திக் கத்திக் கரைந்தோடுமே
நள்ளிரவில் வருகள்வனுனைக் கண்டு
நடுநடுங்கி மனம் வாடுமே - ஏங்கி
நடுநடுங்கி மனம் வாடுமே

ஏழைக் கமக்காரன் வேளைக் குதவிசெய்
ஏவற்காரன் நீயெ யென்னினும் - நல்ல
ஏவற்காரன் நீயே யென்னினும்
ஆளைப்போலப் போலி வேடக்காரன் நீயே
ஆவதறிந்தன னுண்மையே - போலி
ஆவதறிந்தன னுண்மையே

தூரத்திலே யுனைக் கண்டவுட னஞ்சித்
துண்ணென் றிடித்ததென் நெஞ்சகம் - மிகத்
துண்ணென் றிடித்ததென் நெஞ்சகம்
சேரச் சேரப் போலி வேடக்காரனென்று
தெரிய வந்ததுன் வஞ்சகம் - நன்று
தெரிய வந்ததுன் வஞ்சகம்

சிங்கத்தின் தோலினைப் போர்த்த கழுதைபோல்
தேசத்திலே பலர் உண்டுகாண் - இந்தத்
தேசத்திலே பலர் உண்டுகாண்
அங்கவர் தம்மைக்கண் டேமாந்து போகா
அறிவு படைத்தனன் இன்று நான் - உன்னில்
அறிவு படைத்தனன் இன்று நான்.

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப்
பாதங்கள் மெய்ம்மை குன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு
நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு
தோளும் பயந்த தனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங்
கோடன் மயூ ரமுமே!



(கந்தரலங்காரம்)

## க.பொ.த (சாதாரண தர) பரீட்சை இம்முறை வடக்கு முன்னேற்றம்

அண்மையில் வெளியாகிய க.பொ.த (சாதாரணதர) பரீட்சை (2018) பெறுபேறுகளின்படி வடமாகாணம் 2017ஆம் ஆண்டை விட, முன்னேறியிருப்பதை அவதானிக்க முடிகிறது.

இந்த வகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் பரீட்சைக்குத் தோற்றிய 9057 மாணவர்களுள் 6220 பேர் உயர்தரத்துக்கு தகுதி பெற்றுள்ளனர். இது 68.68 வீதமாகும். 2017ஆம் ஆண்டு 67.77 வீதமாக இது காணப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பரீட்சைக்குத் தோற்றிய 2495 மாணவர்களுள் 1384பேர் உயர்தரத்துக்கு தகுதிபெற்றுள்ளனர். இது 55.47 வீதமாகும்.

மன்னார் மாவட்டத்தில் பரீட்சைக்குத் தோற்றிய 1774 மாணவர்களுள் 1280 பேர் உயர்தரத்திற்கு தகுதிபெற்றுள்ளனர். இது 72.15 வீதமாகும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பரீட்சைக்குத் தோற்றிய 1976 மாணவர்களுள் 1221 பேர் உயர்தரத்துக்கு தகுதிபெற்றுள்ளனர். இது 61.79 வீதமாகும்.

வவுனியா மாவட்டத்தில் பரீட்சைக்குத் தோற்றிய 2672 மாணவர்களுள் 1895 பேர் உயர்தரத்திற்கு தகுதி பெற்றுள்ளனர். இது 70.92 வீதமாகும்.

## வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை நூறு வீதம் சித்தி

அண்மையில் வெளியாகிய க.பொ.த (சாதாரண தர) பரீட்சை (2018) பெறுபேறுகளின்படி யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவிகள் நூறு வீதம் சித்தி அடைந்துள்ளனர்.

50 மாணவிகள் 9ஏ தர சித்திகளை பெற்றுள்ளனர். இவர்களுள் 32 மாணவிகள் தமிழ்மொழி மூலமும், 18 மாணவிகள் ஆங்கில மொழி மூலமும் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

இதுதவிர, 49 மாணவிகள் 8ஏ தர சித்திகளையும், 34 மாணவிகள் 7ஏ தர சித்திகளையும், 35 மாணவர்கள் 6ஏ தர சித்திகளையும் பெற்றுள்ளனர்.

பாடசாலையில் மொத்தமாக 231 மாணவிகள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். இவர்களுள் 157 பேர் தமிழ்மொழி மூலமும் 74 பேர் ஆங்கில மொழி மூலமும் பரீட்சை எழுதியிருந்தனர். இவர்கள் அனைவரும் சித்திபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

## அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வு



அகில இலங்கை இந்து மாமன்றத்தின் முன்னாள் தலைவரும், யாழ். பல்கலைக்கழக பேரவையின் முன்னாள் உறுப்பினரும், பிரபல சட்டத்தரணியுமான அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களின் மறைவின் ஓராண்டு நிறைவையொட்டிய நினைவேந்தல் நிகழ்வு இம்மாதம் 2ஆம் திகதி மாலை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறையின் ஏற்பாட்டில், இந்து நாகரிகத்துறை தலைவர் கலாநிதி சுகந்தினி சிறிமுரளிதரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி விக்னேஸ்வரி பவநேசன் வரவேற்புரையையும், அகில இலங்கை இந்து குருமார் அமைப்பின் தலைவர் பிரமஸ்ரீ வை.கு.க.வைத்தீஸ்வரக் குருக்கள் பிரார்த்தனை உரையையும், யாழ்பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி கலாநிதி க.சுதாகர், இந்து நாகரிகத்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன் ஆகியோர் சிறப்புரைகளையும் ஆற்றினார்கள்.

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் 'போர்க்கால சூழலில் ஈழத்து இந்துமத வளர்ச்சியில் கந்தையா நீலகண்டனின் வகிபாகம்' என்ற பொருளில் நினைவுரை ஆற்றினார். இந்து நாகரிகத் துறை விரிவுரையாளர் திரு.சி.ரமணராஜா நன்றியுரை வழங்கினார்.

மேற்படி நிகழ்வில் திருமதி சசிதேவி நீலகண்டன் திரு.பிரணவன் நீலகண்டன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## யாழ். இந்துக் கல்லூரி பரீட்சை பெறுபேறு

க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் (2018) யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களில் 35 பேர் 9ஏ தர சித்திகளையும், 42 பேர் 8ஏ தர சித்திகளையும் பெற்றிருக்கிறார்கள்.

சாடும் தனிவேல் முருகன் சரணம்
சூடும்படி தந்தது சொல்லு மதோ
வீடும் சுரர் மாமுடி வேதமும் வெம்
காடும் புனமும் கமழும் கழலே! (கந்தரநுபூதி)

## திருமதி கலாலட்சுமி தேவராஜா மறைவு



நாடக நடிகையும், நெறியாளரும், எழுத்தாளருமான திருமதி கலாலட்சுமி தேவராஜா அண்மையில் காலமானார். இவர் கடந்த நான்கு தசாப்த காலமாக அரங்கத் துறையிலும் ஈடுபாடு கொண்டிருந்ததுடன் தேசிய கலை இலக்கியப் பேரவை மூலம் பல்வேறு சேவைகளையும் ஆற்றிவந்துள்ளார்.

இவர் தேசிய கலை இலக்கியப் பேரவையின் முக்கியஸ்தரும், சட்டத்தரணியுமான திரு.சோ.தேவராஜா அவர்களின் மனைவியுமாவார். இவரது இறுதிச் சடங்குகள் பண்டத்தரிப்பில் இடம்பெற்றன.

## நீர்வைக் கந்தன் இறுவட்டு வெளியீடு

நீர்வேலி கந்தப்பெருமானின் பெருமையை நினைவுகூர்ந்து பண்டிதர் நீ.சி.முருகேசு அவர்களினால் இயற்றப்பட்ட பாடல்களை உள்ளடக்கிய இறுவட்டு வெளியீட்டு விழா இம்மாதம் முதலாம் திகதி மாலை ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு.த.சோதிலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது கலாநிதி ஆறு.திருமுருகன் இறுவட்டு வெளியீட்டுரையை ஆற்றியதுடன், முதற் பிரதியையும் பெற்றுக் கொண்டார்.

ஆசியுரைகள், வாழ்த்துரைகள், கருத்துரைகள், இறுவட்டு இசையாளர்கள் கௌரவிப்பு என்பனவும் நிகழ்வில் இடம்பெற்றன.

## அதிகரித்துவரும் நாட்டின் வெப்பநிலை

கடந்த சில நாட்களாக இலங்கையில் வெப்பநிலை அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகிறது. இந்த மாதத்தில் வெப்பநிலை மேலும் அதிகரிக்கக்கூடும் என காலநிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

ஏப்ரல் 5ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் நாட்டில் சூரியக் கதிர் வீச்சின் தாக்கம் நேரடியாக இடம்பெறவுள்ளமையால் கடுமையான வெப்பநிலை காணப்படும் என சொல்லப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, இம்மாதம் 15ஆம் திகதியன்று வடமாகாணத்தில் சூரியக் கதிர்வீச்சின் தாக்கம் நேரடியாக இடம்பெறவுள்ளதால், அன்றைய தினம் இங்கு அதிக வெப்பநிலை காணப்படும் என காலநிலை அவதான நிலையத் தகவல்கள் ஊடாக தெரியவருகிறது.

இதுவும் ஒரு சாதனை

## காலால் பரீட்சை எழுதி சித்திபெற்ற மாணவி

பிறப்பிலேயே அங்கவீனமடைந்த மாணவி இவர். இரண்டு கைகளும், ஒரு காலும் இல்லாத நிலையில், தனது ஒரேயொரு காலினால் பரீட்சை எழுதி சித்திபெற்று சாதனை படைத்துள்ளார் எகலியகொட தேசியப் பாடசாலையில் கற்றுவரும் ரஷ்மி நிமேஷா குணவர்த்தன என்ற மாணவி. இவர், 2018 க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் 8ஏ தர சித்தியையும், 1பி தர சித்தியையும் பெற்றுள்ளார். 1பி தர சித்தி தமிழ் மொழி பாடத்திற்கு கிடைத்திருப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

## வசந்த நவராத்திரி விழா

மட்டக்களப்பு மயிலம்பாவெளி இராம்நகர் ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தில் வசந்த நவராத்திரி பெருவிழா இம்மாதம் 5ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) ஆரம்பமாகியுள்ளது. 15ஆம் திகதி (திங்கட்கிழமை) விழா நிறைவுபெறுகிறது.


### சிவபூமி
### மாதாந்த செய்திப் பத்திரிகை

**சந்தா விபரம்**

சிவபூமி - மாதாந்த செய்திப் பத்திரிகைக்கு வருடாந்த சந்தா செலுத்துவதன் மூலம் கிரமமாக பத்திரிகையை பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலமாக ஒவ்வொரு மாதமும் பத்திரிகை அனுப்பிவைக்கப்படும்.

**சந்தாப் பணத்தை பின்வரும் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யலாம்.**

**Hatton National Bank - Chunnakam**
**Sivapoomi Trust - 117020080261**

சந்தாப் பணத்தை வங்கியில் வைப்புச் செய்த பின்னர் அது தொடர்பாக சிவபூமி அறக்கட்டளை அலுவலகத்திற்கு தெரிவிக்கவும்.

வருடாந்த சந்தா (தபாற் செலவு உட்பட)

உள்நாடு : ரூபா 600/=


வெளிநாடு : 25$ (அமெரிக்க டொலர்)

தொடர்புகளுக்கு : சிவபூமி அறக்கட்டளை
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தொலைபேசி இல : 021 222 7938

## வடகோவை இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் (23.03.2019)






## மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் பங்குனித் திங்கள் பொங்கல் நிகழ்வு




## சிவத்தமிழ்வித்தகர் சிவ.மகாலிங்கம் அவர்களது மறைவின் ஒருமாத நிறைவு - நினைவேந்தல்








## சிவயோக சுவாமிகளின் 55ஆவது குருபூசை நிகழ்வு (18.03.2019)



Registered in the Dept.of Post of Sri Lanka Under No. QD/29/News/2019

உலகப் பிரசித்தி பெற்ற
திருவாரூர் தேர்



மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்
வருடாந்த பெருந்திருவிழா



நீர்வேலி கந்தசுவாமி கோயில் கொடியேற்றம் (01.04.2019)








உரும்பிராய் இந்துக் கல்லூரி
வருடாந்த பரிசளிப்பு விழா (03.04.2019)



9789557420004
ISBN 978-955-7420-00-4

இந்தப் பத்திரிகை கோண்டாவில் சிவபூமி தொழிற்பயிற்சிப் பாடசாலையில் அச்சிடப்பட்டு சிவபூமி அறக்கட்டளையால் வெளியிடப்பட்டது. (ஏப்ரல் - 2019)